ஸ்ரீ :

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகசியம்

அன்புத்தாயார் ஞானாம்பாள்
அவர்களின்
முதலாம் ஆண்டு நினைவு மலர்.

வெளியீடு :
C. பாலவெங்கட்டமணி
C/o. K.M. ரங்கையய்ய செட்டியார் சன்
நாட்டு மருந்துக்கடை, இராசிபுரம்.



 524

ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமாநுஜாய நம ;

அறிமுகம்

உயிருடன் வாழ்ந்தவரெல்லாம் வாழ்ந்தவர் அல்லர். யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற குறிக்கோளோடு வாழ்க்கை நடத்தியவரே இம்மண்ணுலகில் வாழ்ந்தவராக மதிக்கப்படுவார்.

அத்தகைய உயர்ந்த நோக்கத்துடன், இராசை மாநகரில் வாழ்ந்தவர் எங்கள் தாத்தா, திரு.K.M. ரங்கைய செட்டியார். அவர், வைணவப் பெரும்பக்தி உணர்வோடு, சித்த மருத்துவத்தொழில் புரிந்த வந்தார். மருத்துவத் தொழிலை நல்லதோர் கைங்கர்யமாகச் செய்து வந்தது அவரது சிறப்பாகும்.

அவருக்குத் திருக்குமாரராகத் தோன்றிய எங்கள் தந்தையார் திரு. R. **சந்திரஹாசன்** அவர்கள், எமது தாத்தாவைப் போலவே, பக்தி உணர்வுடன் சித்த மருத்துவத் தொழிலை இராசிபுரத்தில் சிறப்பாக நடத்திக்கொண்டு வருகின்றார்கள். எமது தந்தையாரின் கைப்பட்ட மருந்து, பலப்பல விதமான நோய்களையும் நோயாளிகளின் உடல்களிலிருந்து அகற்றியுள்ளது. இவ்வுண்மையை இப்பகுதி மக்கள் பலரும் அறிவர். எம் தந்தையார், தம் வாழ்க்கை வசதிக்கு வேண்டிய ஆலோசனைகளை, அவ்வப்போது அவரது அண்ணார் திரு. K.M.R. **கிருஷ்ணமூர்த்தி செட்டியார்** அவர்களிடம் (பிரபல ஜவுளி வியாபாரி) கேட்டுத் தெளிவுபெற்றுக்கொள்வார்.

எமது தந்தையார் செய்து வரும் மருத்துவத்துறை வளர்ச்சிக்குப் பெருந்துணையாக இருந்து உதவியவர் எங்கள் அன்புத் தாயார் திருமதி. **ஞானாம்பாள் அம்மையார்** ஆவார். எம் தாயார், எங்கள் தந்தையாருக்கு, ஏற்றதோர் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தும், இல்லத்தரசிக்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தும், சிறந்த வைணவப் பக்தி உள்ளத்துடன் வாழ்ந்து வந்தார். அவர், எங்களை அன்புதவழும் உள்ளத்துடன் வளர்த்தெடுத்து நல்ல நிலையில் நாங்கள் வாழும் வண்ணம் உருவாக்கினார்கள். அவ்வாறு எங்களை உருவாக்கிய எமது அன்புத்தாயாரை என்றும் மறவோம். அவரைத் தெய்வமாகக் கருதி என்றும் வணங்கி மகிழ்வோம்.

தாயாரின் முதலாம் ஆண்டு நினைவு மலராக, இந்நூலை, அன்பளிப்பு வெளியீட்டாக்கி, எமது நன்றி உணர்வை தாயாரது திருவடியில் வணக்கத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

தாயாரின் திருக்கரங்களால்
புனிதம் பெற்ற

புதல்விகள் :
D. திலகம்தினகரன்
S.ஜலஜா சுரேந்திரன்

புதல்வன் :
K.M.R.C.**பாலவெங்கடமணி**

பேரன், பேத்திகள்:
D.தினேஷ் D.திவ்யா, S.சுப்ரஜா

ஈஸ்வர. சித்திரை : 14-4-1997.

இந்நூலை உரிய காலத்தில் நன்கு அச்சிட்டுக் கொடுத்த இராசை இராசி **ஆப்செட்** அச்சகத்தாருக்கு நன்றி.

ஸ்ரீ:

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகசியம்

திவ்யப் பிரபந்தத்துள் அடங்கியிருப்பன இருபத்து நான்கு பிரபந்தங்களாகும். அவற்றுள் நான்கு பிரபந்தங்களை அருளியவர் நம்மாழ்வார். 'திருவிருத்தம், திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி' என்ற நான்கு பிரபந்தங்களும் நான்கு வேதங்களின் சாரம் என்பது சான்றோர்களது கொள்கை.

ஆழ்வார், ஆண்டவனோடு அனுபவித்த அனுபவங்கள் பலவற்றை, திருவாய்மொழியில் அருளியுள்ளார்கள். அந்த அனுபவங்களுள் ஒன்று 'தலைவன் தலைவி' என்ற அகப்பொருள் துறையாகும். இத்துறையில் அமைந்த பாசுரங்கள் 'அகப்பொருள் பாசுரம்' எனப்படும். தலைவி, தோழி, தாயார் என்பவர்கள் பேசுவதாக அமைந்த பாசுரங்கள் இந்த அமைப்பினுள் அடங்கும். தாயார் பாசுரமாக அமைந்திருப்பது திருக்கோளூர்ப்பதிகமாகும்.

நம்மாழ்வாராகிய தலைவி, பெருமாளாகிய தலைவனோடு கலக்க வேண்டும் என்ற பெரிய விருப்பம் கொண்டவளாக இருக்கின்றாள். இந்த விருப்பம் நிறைவேறுவதற்கு உதவி செய்பவர்களாக வீட்டில் யாரும் இல்லை. அதனால், இந்தத் தலைவி, தன் தலைவனைப் பெறுவதற்காக, அவன், திருவுருவம் கொண்டு வீற்றிருக்கும் திருக்கோளூரை நோக்கிப் புறப்பட்டு விட்டாள். தலைவியின் தாயாரைப் பார்த்து, அயல்வீட்டினர் 'உன் மகள் எங்கே?' என்று கேட்கின்றார்கள். 'என் மகள் புகும் ஊர் திருக்கோளூரே' என்று பதில் கொடுக்கிறாள்

தலைவியின் தாய். இப்படி, தாயார் பாசுரங்களாக அமைந்திருக்கின்ற பத்துப் பாசுரங்களும், ஆச்சாரியர்கள் உள்ளத்தைக் கவர்ந்தனவாகும்.

வைணவ ஆச்சாரியர்களுள் தலை சிறந்தவராக விளங்குபவர் எம்பெருமானார் - இராமானுஜர் ஆவார். இவர், திருவாய்மொழிப் பாசுரங்களில் மூழ்கித் திளைத்து, அனுபவித்து அனுபவித்து இன்புறுபவர். திருக்கோளூர்ப் பதிகத்தைப் படித்ததும் 'புகும்ஊர் திருக்கோளூரே' என்ற தொடர், இராமானுஜர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. அதனால், திருக்கோளூர் சென்று அங்கு புகலாம் என்று புறப்பட்டார்.

திருக்கோளூர், பாண்டி நாட்டில் (திருநெல்வேலி மாவட்டத்தில்) நம்மாழ்வார் அவதாரம் செய்த திருக்குகூருக்குப் பக்கத்தில் உள்ள திருத்தலம். மதுரகவி ஆழ்வார் அவதரித்ததும் இந்தத் திருத்தலமாகும். இங்கு கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள, 'அரவிந்த லோசனனை,' நம்மாழ்வார் அனுபவித்து இன்புற்றது போல, வைணவ ஞானகுருவாகிய இராமானுஜரும் தம் கண்களால் கண்டுகளிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்நகருக்குள் புகுந்தார்.

அவர் நகருக்குள் புகும்போது, அங்கிருந்து ஒரு பெண்பிள்ளை, நகரைவிட்டு வெளியேறிக் கொண்டிருந்தாள். இராமானுஜருக்கு ஆச்சரியமாக இருந்தது. 'புகும் ஊர் திருக்கோளூராக இருக்க, உனக்கு வெளியேறும் ஊராக இது ஆகிவிட்டதே ஏன்?' என்று ஆச்சாரியார் பெண்பிள்ளையைக் கேட்டார். அந்தப் பெண்பிள்ளை அளித்த பதில்தான் 'திருக்கோளூர்ப்

பெண்பிள்ளை ரகசியம்' ஆகும். இதில் 81 ரகசியங்கள் அடங்கியுள்ளன. அவ்வளவும் ஆழ்ந்த பொருள் நிறைந்தனவாகும். வைணவப் பக்தர்கள் 81 பேருடைய அருஞ்செயல்கள் இங்கு பேசப்படுகின்றன. இந்த திருக்கோளூர்ப் பதிகமும், பக்தர்களது அருஞ்செயல்கள் கூறும் இந்த இரகசியமும், வைணவர்களுக்குச் சிறந்ததோர் செல்வமாகும்.

திருக்கோளூர்ப் பதிகம்

என் மகள் திருக்கோளூர்தான் சென்றிருப்பாள்.

1. உண்ணும் சோறு பருகும்நீர்
    தின்னும் வெற்றிலையும் எல்லாம்
கண்ணன், எம்பெருமான் என்றுஎன்றே
    கண்கள் நீர்மல்கி
மண்ணினுள் அவன்சீர் வளம்மிக்க
    அவன்ஊர் வினவி,
திண்ணம் என்இளமான் புகும்ஊர்
    திருக்கோ ளூரே.

தலைவி திருக்கோளூர்க்குப் போயிருப்பாளோ!

2. ஊரும் நாடும் உலகமும்
    தன்னைப்போல், அவனுடைய
பேரும் தார்களுமே பிதற்றக்
    கற்புவான் இடறி,
சேரும்நல் வளம்சேர் பழனத்
    திருக்கோ ளூர்க்கே
போருங்கொல் உரையீர் கொடியேன்
    கொடி பூவைகளே!

திருக்கோளூரில் என்மகள் என்ன செய்வாள்?

3. பூவை, பைங்கிளிகள், பந்து,
தூதைபூம் புட்டில்கள்,
யாவையும் திருமால் திருநாமங்-
-களேகூவி எழும், என்
பாவை போய்இனித் தண்பழனத்
திருக்கோ ளூர்க்கே,
கோவைவாய் துடிப்ப மழைக்கண்ணொடு
என்செய் யும்கொலோ!

திருக்கோளூர்க்கே என்மகள் செல்ல விரும்பினாள்?

4. கொல்லை என்பர்கொ லோகுணம்
மிக்கனள் என்பர்கொலோ,
சில்லை வாய்ப்பெண்டு கள்அயற்
சேரியுள் ளாரும்எல்லே,
செல்வம் மல்கி அவன்கிடந்த
திருக்கோ ளூர்க்கே,
மெல்லிடை நுடங்க இளமான்
செல்ல மேவினளே.

திருக்கோளூரை என்மகள் எப்படி ரசிக்கின்றாளோ?

5. மேவி நைந்து நைந்துவிளை -
யாடல்உறாள்; என்சிறுத்
தேவி போய், இனித்தன்
திருமால் திருக்கோ ளூரில்,
பூவியல் பொழிலும், தடமும்
அவன்கோ யிலும்கண்டு,
ஆவிஉள் குளிர எங்ஙனே
உகக்கும்கொல் இன்றே?

என்மகள் திருக்கோளூரானைக் கண்டு நைவாள்

6. இன்றுஎனக்கு உதவாது அகன்ற
இளமான் இனிப்போய்
தென்திசைத் திலதம் அனைய
திருக்கோ ளூர்க்கே
சென்று, தன்திருமால் திருக்கண்ணும்
செவ்வாயும் கண்டு,
நின்று நின்று நையும்
நெடுங்கண்கள் பனிமல்கவே.

திருக்கோளூர்க்கு என் மகள் எப்படி நடந்திருப்பாள்

7. மல்குநீர் கண்ணொடு மையல்
உற்ற மனத்தனளாய்
அல்லும்நன் பகலும் நெடுமால்
என்றுஅழைத்து, இனிப்போய்
செல்வம் மல்கி அவன்கிடந்த
திருக்கோ ளூர்க்கே,
ஒல்கி, ஒல்கி நடந்துஎங்ஙனே
புகுங்கொல் ஒசிந்தே!

என்மகள் கண்ணீர் துளும்பச் செல்வாளோ?

8. ஒசிந்த நுண்ணிடை மேல்கையை
வைத்து நொந்து நொந்து,
கசிந்த நெஞ்சின ளாய்க்கண்ண
நீர்துளும்பச் செல்லும்கொல்?
ஒசிந்த ஒண்மலராள் கொழுநன்
திருக்கோ ளூர்க்கே,
கசிந்த நெஞ்சின ளாய்எம்மை
நீத்தஎம் காரிகையே?

என்மகள் எம்மை நினையாமல் சென்றுவிட்டாளே?

9. காரியம் நல்லனகள்அவை காணில்என்
கண்ணனுக்கு என்று
ஈரியாய் இருப்பாள்; இதெல்லாம்
கிடக்க; இனிப்போய்,
சேரிபல் பழிதூய் இரைப்பத்
திருக்கோ ளூர்க்கே
நேரிழை நடந்தாள் எம்மை
ஒன்றும் நினைத்திலளே.

பழி வருதலை நினையாமல் என் மகள் போய்விட்டாளே?

10. நினைக்கிலேன் தெய்வங்காள்! நெடுங்கண்
இளமான் இனிப்போய்,
அனைத்து லகும் உடைய
அரவிந்த லோசனனை,
தினைத்தனை யும்விடாள் அவன்சேர்
திருக்கோ ளூர்க்கே,
மனைக்கு வான்பழியும் நினையாள்
செல்ல வைத்தனளே.

இவற்றைப் படித்தோர் பொன்னுலகையாள்வர்

11. வைத்த மாநிதி யாம்மது
சூதனை யேஅலற்றி,
கொத்தலர் பொழில் சூழ்குரு
கூர்ச்சட கோபன்சொன்ன,
பத்து நூற்றுள் இப்பத்து
அவன்சேர் திருக்கோளூர்க்கே
சித்தம் வைத்து உரைப்பார்
திகழ்பொன் னுலகாள்வாரே.

இத்தகைய திருக்கோளூரை விட்டு வெளியேறும் பெண்பிள்ளை, எம்பெருமானார் – இராமானுஜருக்கு அளித்த பதில், பக்தர்களது சிந்தனைக்குரியதொன்றாகும். 'சுவாமி! முயல் புழுக்கை வரப்பில் இருந்தால் என்ன? வயலில் இருந்தால் என்ன? ஞானம் அற்ற நான் எங்கிருந்தால் என்ன?' எனக்கூறி பின்வரும் எண்பத்தொரு வாக்கியங்களை விண்ணப்பம் செய்தாள்.

1. அழைத்து வருகிறேனென்றேனோ அக்குரூரைப் போலே.
2. அகமொழிந்து விட்டேனோ விதுரரைப் போலே.
3. தேகத்தை விட்டேனோ ரிஷிபத்தினியைப் போலே.
4. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப் போலே.
5. பிணமெழுப்பி விட்டேனோ தொண்டைமானைப் போலே.
6. பிணவிருந் திட்டேனோ கண்டாகர்ணனைப் போலே.
7. தாய்க்கோலஞ் செய்தேனோ அநுசூயையைப் போலே.
8. தந்தைஎங்கே யென்றேனோ துருவனைப் போலே.
9. மூன்றெழுத்து சொன்னேனோ கத்திரபந்துவைப் போலே.
10. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப் போலே.
11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே.
12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரானைப் போலே.
13. ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் போலே.

14. அவன் சிறியனென்றேனோ ஆழ்வாரைப் போலே.
15. ஏதேனும் என்றேனோ குலசேகரர் போலே.
16. யான் சத்யமென்றேனோ கிருஷ்ணனைப் போலே.
17. அடையாளம் சொன்னேனோ கபந்தனைப் போலே.
18. அந்தரங்கம் சொன்னேனோ திரிஜடையைப் போலே.
19. அவன் தெய்வமென்றேனோ மண்டோதரியைப் போலே.
20. அஹம்வேத்மி என்றேனோ விசுவாமித்திரனைப் போலே.
21. தேவு மற்றறிவேனோ மதுரகவியார் போலே.
22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியாரைப் போலே.
23. ஆழிமறை யென்றேனோ வாசுதேவரைப் போலே.
24. ஆயனை வளர்த்தேனோ யசோதையாரைப் போலே.
25. அநுயாத்திரை செய்தேனோ அணில்களைப் போலே.
26. அவல்பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே.
27. ஆயுதங்கள் ஈந்தேனோ அகஸ்தியரைப் போலே.
28. அந்தரங்கம் புக்கேனோ சஞ்சயனைப் போலே.
29. கர்மத்தால் பெற்றேனோ ஜனகரைப் போலே.
30. கடித்துஅவனைக் கண்டேனோ திருமங்கையார் போலே.
31. குடைமுதலானது ஆனேனோ அனந்தாழ்வான் போலே.
32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப் போலே.

33. இளைப்புவிடாய் தீர்த்தேனோ நம்பாடுவான் போலே.

34. இடைகழியே கண்டேனோ முதலாழ்வார்களைப் போலே.

35. இருமன்னர் பெற்றேனோ வால்மீகரைப் போலே.

36. இருமாலை ஈந்தேனோ தொண்டரடிப்பொடியார் போலே.

37. அவனுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சியார் போலே.

38. அவன்மேனி ஆனேனோ திருப்பாணரைப் போலே.

39. அனுப்பி வையுமென்றேனோ வசிஷ்டரைப் போலே.

40. அடி வாங்கினேனோ கொங்குப்பிராட்டியைப் போலே.

41. மண்பூவை யிட்டேனோ குருவநம்பியைப் போலே.

42. மூலமென்றழைத்தேனோ கஜராஜனைப் போலே.

43. பூசக் கொடுத்தேனோ கூனியைப் போலே.

44. பூவைக் கொடுத்தேனோ மாலாகாரரைப் போலே.

45. வைத்த இடத்திருந்தேனோ பரதனைப் போலே.

46. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே.

47. அக்கரைக்கே விட்டேனோ குகப்பெருமாளைப் போலே.

48. அரக்கனுடன் பொருதேனோ பெரியவுடையாரைப் போலே.

49. இக்கரைக்கே சென்றேனோ விபீஷணரைப் போலே.

50. இனியதொன்று வைத்தேனோ சபரியைப் போலே.

51. இங்கும் உண்டென்றேனோ பிரஹ்லாதனைப் போலே.

52. இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப் போலே.

53. காட்டுக்குப் போனேனோ பெருமானைப் போலே.

54. கண்டுவந்தேன் என்றேனோ திருவடியைப் போலே.

55. இருகையும் விட்டேனோ திரௌபதியைப் போலே.

56. இங்குபால் பொங்குமென்றேனோ வடுகநம்பியைப் போலே.

57. இருமிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப் போலே.

58. நில்லென்று பெற்றேனோ இளையாற்றுக்குடி நம்பியைப் போலே.

59. நெடுந்தூரம் போனேனோ நாதமுனியைப் போலே.

60. அவன்போனான் என்றேனோ மாருதியாண்டான் போலே.

61. அவன்வேண்டா என்றேனோ ஆழ்வானைப் போலே.

62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானாரைப் போலே.

63. அருளாழம் கண்டேனோ நல்லானைப் போலே.

64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே.

65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வவாரி யாண்டானைப் போலே.

66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே.

67. அநுகூலம் சொன்னேனோ மாலியவானைப் போலே.

68. கள்ளனிவ னென்றேனோ லோககுருவைப் போலே.

69. கடலோசை என்றேனோ பெரியநம்பியாரைப் போலே.

70. சுற்றிக் கிடந்தேனோ திருமாலையாண்டான் போலே.

71. சூளுறவு கொண்டேனோ திருக்கோட்டியூரார் போலே.

72. உயிராய பெற்றேனோ ஊமையைப் போலே.

73. உடம்பை வெறுத்தேனோ திருநறையூராரைப் போலே.

74. என்னைப்போல் என்றேனோ உபரிசரனைப் போலே.

75. யான் சிறியேனென்றேனோ திருமலைநம்பியைப் போலே.

76. நீரில் குதித்தேனோ கணபுரத்தானைப் போலே.

77. நீருகம் கொண்டேனோ காசிசிங்கனைப் போலே.

78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப் போலே.

79. வாயிற்கை விட்டேனோ எம்பாரைப் போலே.

80. தோள்காட்டி வந்தேனோ பட்டரைப் போலே.

81. துறைவேறு செய்தேனோ பகவரைப் போலே.

எம்பெருமான் திருவடிக்கீழ் ஈடில்லா பக்திகொண்ட அடியவர்கள் பெருமை பாடும் இவ்வாக்கியங்களின் விரிவை இனிக் காண்போம்.

1. அழைத்து வருகிறேன் என்றேனோ அக்ரூரரைப் போலே!

இதில் அக்குரூரர் வைபவம் பேசப்படுகிறது. அக்குரூரர் யது குலத்தைச் சேர்ந்தவர். இவருடைய தாய் காந்தினி. கம்ஸனின் சகோதரியின் கணவர்.

கம்ஸன், கண்ணபிரானைக் கொல்லும் கருத்துடன் வில்விழவு ஒன்றுக்கு ஏற்பாடு செய்தான். அதற்குக் கண்ணனையும் பலராமனையும் அழைத்து வருமாறு தன் மந்திரியும் உறவினனுமான அக்ரூரரை ஏவினான்.

கம்ஸனுடைய வஞ்சக எண்ணத்தை அறிந்த அக்ரூரர் வில் விழாவுக்கு வரும்படி தாம் எப்படிக் கூறியழைப்பது என முதலில் தயங்கினார்.

பின்னர் கண்ணபிரான் பரம்பொருளான ஸ்ரீமந் நாராயணனே எனத்துணிந்து அவனை இந்தக்காரணத்தினாலாவது தரிசிக்கலாம் என மகிழ்ந்து "உம்மாணைப்படியே அழைத்து வருகிறேன்" என்று கூறினார்.

"சேணுலகில் வாழும் உயர்தேவர் உளமாலும்
மாணெழில் உடைக் கமலை மன்னவனை இன்னே
காணலுறுமே நமது கட்புலமும் என்னா
யாணர்நறு முல்லைநிலம் எய்தினான் விழைந்தே"

–செவ்வைசூடுவார் பாகவதம்.

"எந்தக் காரணத்தினாலாவது இறைவனைத் தரிசிக்க வாய்ப்பு ஏற்பட்டு அதனை ஏற்றுக் கொண்டேனோ?" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அக்ரூரரைப் போல அழைத்து வருகிறேனென்றேனோ" என்கிறாள்.

2. அகமொழிந்து விட்டேனோ விதுரரைப் போலே!

பாண்டவர்களுக்காக வேண்டி, பரந்தாமன் அஸ்தினாபுரிக்குத் தூது சென்ற நாளில் பீஷ்மர், துரோணர், அசுவத்தாமா, விதுரர் போன்றோர் அவனை எதிர்கொண்டு அழைக்கச் சென்றார்.

தாம் சிறந்த அறிஞரானதனால் தமது இல்லத்திற்கே கண்ணபிரான் எழுந்தருளுவார் என பீஷ்மர் எண்ணினார். குலத்தாலும் கல்வி நலத்தாலும் தானே உயர்ந்தவரானதால் தனது வீட்டிற்கே கண்ணபிரான் வருவார் என துரோணர் நினைத்தார். விதுரர் அற்ப இயல்பினனான நான் கண்ணனை எப்படி அழைப்பது என எண்ணி உருகினார்.

உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து அறியும் கண்ணபிரானுக்குத் தெரியாதா அவரவர்கள் நினைப்பு!

கண்ணன் வழியிலுள்ள இல்லங்களையெல்லாம் ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டி இது யாருடைய இல்லம் என வினவி வந்தான். விதுரருடைய இல்லம் வந்ததும் இது யாருடைய மாளிகை என்று கேட்க, அருகில் நின்ற விதுரர் "இது தங்கள் திருமாளிகை" என்றார் "ஆ, எனக்கு இங்கும் ஒரு இல்லமா" என்று சொல்லிக்கொண்டே விதுரர் திருமாளிகையினுள் கண்ணன் எழுந்தருளினான்.

யான் எனது என்னும் செருக்கறுத்தல் மெய்யடியார் இயல்புகளுள் ஒன்று. "நீர் நுமது என்றிவை வேர்முதல் மாய்த்து இறை சேர்மின்" என்பது நம்மாழ்வார் அருள்வாக்கு. அதுபோல விதுரரும் யான் எனது என்னும் அகப்பற்று புறப்பற்று இரண்டையும் விட்டவர். தாமும்

தமது உடைமையும் தாமோதரனுக்கே உரியது என எண்ணியதால் தமது மாளிகையை விதுரர் கண்ணனுடையது என்றார் இவ்வாறு நான் நினைத்தேனோ என்று திருக்கோளூப் பெண்பிள்ளை "விதுரரைப்போலே அகமொழிந்துவிட்டேனோ" என்கிறாள்.

3. தேகத்தை விட்டேனோ ரிஷிபத்தினியைப் போலே!

கண்ணன் கானகத்தில், ஆயர்குலத்தவருடன் ஆனிரை மேய்த்துக்கொண்டிருக்கையில் ஒருசமயம் கோபாலர்கள் கண்ணனிடம் "எங்களுக்குப் பசிக்கிறது. பசிதீர்க்கும் வழி கூறவேண்டும்" என்றார்கள்.

அதற்கு, கண்ணன் "அந்தணர்கள் அருகில் உள்ள இடத்தில் ஆங்கீரஸம் எனும் யாகம் செய்கிறார்கள். அவர்களிடம் சென்று என் பெயரைக் கூறி உணவு வாங்கி வாருங்கள்" என்கிறார். அவர்களும் அப்படியே போய்க்கேட்க, அந்தணர்கள் ஒன்றும் செய்யாமல் வாளா இருந்தனர். கோபியர்கள் கண்ணனிடம் மீண்டும் வந்து இதைச் சொல்ல கண்ணனும் "அந்தணர்களது மனைவியர்களிடம் போய்க் கேளுங்கள். அவர்கள் தவறாது அன்னம் அளிப்பார்கள்" என்றான். கோபாலர்கள் அப்படியே அங்கு சென்று கேட்க அந்தணப் பெண்கள் அறுசுவை உணவு தயாரித்து தாங்களே கொண்டு வந்து பரிமாறினார். கண்ணனையும் கண்டு வழிபட்டனர்.

பின்னர் கண்ணன் அவர்களைத் தங்கள் தங்கள் வீடு செல்லப் பணித்தான். தங்கள் கணவன்மார்கள் கோபிப்பார்களோ என அஞ்சிப் போவதற்குத் தயங்கினார்கள். கண்ணன் அவர்களின் பயத்தைப் போக்கி அருள்செய்து போகுமாறு விட்டான். அவர்களும் அப்படியே செல்ல, அவர்களுள் ஒருத்திமட்டும் கண்ணனைவிட்டுப் பிரிய மனமில்லாமல் கண்ணனை நினைந்தே உயிரை விட்டாள்.

"அப்படி உயிரைக் கருதாது இறைவனையே மனத்திற் கொள்ளும் விருப்பம் உடையேனோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "ரிஷிபத்தினியைப் போலே தேகத்தை விட்டேனோ" என்கிறாள்.

4. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப் போலே!

இராவணன் முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் உடையவன். அவன் சீதையென்பதோர் தெய்வம் கொணர்ந்து வம்புலாம் கடிகாவில் சிறையாய் வைத்த குற்றம் புரிந்தான். அக்குற்றத்தால் அரக்கன் வாழ்வு அழிந்தொழிந்தது.

இராவணனது சீற்றத்தைச் சிறிதும் கருதாமல் அசோக வனத்தில் தன் கணவனை நினைத்து அறம்நோற்றாள் சீதாபிராட்டி.

"இதுபோல அடியேனுக்கு சக்தியுண்டோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "பிராட்டியைப்போலே தசமுகனைச் செற்றேனோ" என்கிறாள்.

5. பிணமெழுப்பி விட்டேனோ தொண்டைமானைப் போலே!

கிருஷ்ணசர்மா எனும் அந்தணர் ஒருவர் தன் தந்தையின் அஸ்திகளை கங்கையில் சேர்க்க வேண்டுமென்று விரும்பி காசி செல்லப் புறப்பட்டார். தன் மனைவியையும் மூன்றுமாத கைக்குழந்தையையும் உடன்கொண்டு பயணம் மேற்கொண்டார். தன் மனைவியால் நெடிய பயணம் மேற்கொள்ள இயலாமை அறிந்த கிருஷ்ணசர்மா நாடாளும் மன்னனான தொண்டைமானிடம் இவர்கள் இருவரையும் அடைக்கலப் பொருளாக ஒப்படைத்து மன நிம்மதியுடன் காசி சென்றார். கருணை வடிவான தொண்டைமானும் தாய்க்கும் சேய்க்கும் பாதுகாப்பான இடத்தில் வசதி செய்து கொடுத்தான். பல நெருக்கடியான அரசியல் விவகாரங்களில் ஆர்வம்கொண்ட காரணத்தால் சிறிது காலத்திற்குப்பின் அவர்களைத் தொண்டைமான் மறந்தேவிட்டான்.

கிருஷ்ணசர்மா தன் தந்தையின் அஸ்திகளைக் கங்கையில் சேர்த்துவிட்டு கங்கா தீர்த்தத்துடன் தொண்டைமானைக்காண வந்தான். அரசனுக்கு தீர்த்தப்பிரசாதம் கொடுத்த பின்னர் தன் மனைவியையும் குழந்தையையும் காண விரும்பினான். அப்போதுதான் நினைவு வந்த தொண்டைமான் புகலிடத்தில் சென்று தாயையும் சேயையும் பார்க்க, அவர்கள் இருவரும் மாண்டு கிடப்பதைக் கண்டு மனம் வருந்தினான். செய்வதறியாது திகைத்தான். உடனே கிருஷ்ணசர்மாவிடம் வந்து உன் மனைவியும் குழந்தையும் அரண்மனைப் பெண்களுடன் திருமலை ஸ்ரீநிவாசனைத் தரிசிக்கப் போய் உள்ளார்கள்.

இரு தினங்களில் வந்துவிடுவார்கள் என்று கூசாமல் பொய்யைச் சொல்லி அச்சமயம் தப்பித்துக்கொண்டான்.

பின்னர் ஏழுமலையானை நினைத்து உருகி கண்ணீர்விட்டு, கதறி "சுவாமி கருணைக்கடலே அடியேனை இவ்வாபத்தினின்றும் மீட்டுவிடு. இல்லையேல் உன திருவடியில் சேர்த்து விடு" என்று பன்முறை பிரார்த்தித்தான், வேண்டுவோர் இடர் களையும் வெங்கடாஜலபதியும் தொண்டைமான் முறையீட்டிற்கு மனம் இரங்கி நேரில் தோன்றினான். "அச்சடலங்களை திருமலைக்குக் கொண்டுவருமாறு கட்டளையிட்டான். அவ்வாறே அச்சடலங்கள் கொண்டுவரப்பட்டதும் தன்மாயையினால் அவர்களை எழுப்பிக் கொடுத்தான். இதுகண்ட தொண்டைமானும் ஆனந்தம்கொண்டு கிருஷ்ணசர்மாவிடம் அவர்களை ஒப்புவித்தான்.

இப்படி நிகரற்ற பக்தியால் வந்தது இச்செயற்கரிய செயல். இதை, திருக்கோளூர்ப் பெண்பிள்ளை தொண்டைமானைப்போல பிணமெழுப்பிவிட்டேனோ" என்கிறாள்.

6. பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப் போலே!

கண்டாகர்ணன் என்பான் ஒரு சிவபக்தன். திருமால் மீது துவேஷம் கொண்டு திருமால் திருநாமம் தன் காதில் படாவண்ணம் தன் காதுகளில் மணிகளைக் கட்டிக் கொண்டு அவற்றை அசைத்துக் கொண்டிருந்ததனால் "கண்டா கர்ணன்" என்று பெயர் பெற்றான். அவன் சிவபெருமானை நோக்கி பல்லாண்டு தவம் செய்தான். சிவனும் இவனைத் திருத்திப் பணிகொள்ள நினைத்து

இவன் முன்னர் தோன்றி முத்திவேண்டின் முகுந்தனைப் பணி என்று கூறினார். உடனே தன் காதில் அணிந்திருந்த மணிகளைக் கழற்றி எறிந்துவிட்டு குபேரனிடம் சென்று நிகழ்ந்தவற்றைக் கூறினான் குபேரன் அவனுக்கு இரங்கி எட்டெழுத்து மந்திரம் உபதேசித்து, திருமால் துவாரகையில் கண்ணனாக அவதரித்துள்ள செய்தியைக் கூறினான். 'கண்ணனை வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்று குபேரன் உணர்த்தினான். கண்டாகர்ணனும் கண்ணனைத் தரிசிக்க துவாரகை சென்றபோது கண்ணனை எதிரிற்கண்டு தான் கொன்று கொண்டு வந்த பிணத்தை விருந்தாக வைத்துப் புசிப்பாயாக என்று பிரார்த்தித்தான்.

கண்ணபிரானும் அதனை அங்கீகரித்து அவனுக்கு அழியாப் பதத்தை அருளிச் செய்ததோடு அவன் தம்பியான தந்தகனுக்கும் முத்தி அளித்தருளினான். இதைத்தான் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "கண்டாகர்ணனைப் போலே பிணவிருந்திட்டேனோ" என்கிறாள்.

7. தாய்க்கோலம் செய்தேனோ அநுசூயையைப் போலே!

அநுசூயை அத்திரி முனிவரின் மனைவி. கற்புக்கடம் பூண்ட பொற்புடைச்செல்வி இராமபிரான் சீதையுடன் அத்திரி முனிவரின் ஆசிரமத்தை அடைந்த காலத்தில் சீதை அநுசூயையை வணங்கி நின்றாள். சீதையின் திருமேனி வண்ணம் கண்டு அநுசூயை

வியந்து பிராட்டிக்குப் பட்டாடை உடுத்தி மலர்சூட்டி அலங்கரித்து நல்லுரை கூறினாள். தாய்போன்று பரிவுடையளாய் தாய்க்கோலம் கொண்ட அநுசூயை பிராட்டியின் திருமேனி எழிலைக்கண்டு வணங்கி மகிழ்ந்தாள்.

"இவ்வாறான மகிழ்சி எனக்கு உண்டோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அநுசூயையைப் போலே தாய்க்கோலம் செய்தேனோ" என்கிறாள்.

8. தந்தை எங்கே என்றேனோ துருவனைப் போலே!

உத்தானபாதன் என்னும் மன்னனுக்கு சுநீதி, சுருசி என்ற இரண்டு மனைவியர். சுநீதிக்குத் துருவன் என்பவனும், சுருசிக்கு உத்தமன் என்பவனும் பிறந்தார்கள். மன்னனுக்கு இளைய மனைவியான சுருசியிடம் மோகம் அதிகம். ஒருநாள் மன்னன் சுருசியின் அந்தப்புரத்தில் மடிமீது உத்தமனை வைத்து கொஞ்சிக் கொண்டிருக்கும் போது துருவன் அங்கு சென்றான். தந்தையின் மடிமீது உட்கார, துருவன் முயன்றபோது மாற்றாந்தாயாகிய சுருசி "என் வயிற்றில் பிறந்தவனுக்கே மன்னன் மடித்தலம் சொந்தம், அதற்கு உரிமை உனக்கில்லை எனக் கடுமொழி கூறினாள். சுருசிமேல் கொண்ட மையலால் மன்னனும் வாளாவிருந்தான். அறிவாளியான துருவன் இதுகண்டு தன் தாயான சுநீதியிடம் நடந்ததைக் கூறி அழுதான். சுநீதியும் "மகனே உலகத்துக்கெல்லாம் தந்தையாகிய பரம்பொருளை நினைத்துத் தவமிருந்தால் உன் விருப்பம் நிறைவேறும்" என்றாள். துருவனும் "அந்தத் தந்தை எங்கே இருக்கிறான்" என்று வினவினான். "கானகம் சென்று தவம்செய்தால் அந்தத் தந்தையை அடையலாம்" என்றாள் சுநீதி.

துருவனும் அவள் அனுமதி பெற்று, கானகம் சென்று சப்த ரிஷிகளிடம் மகாமந்திரம் உபதேசம் பெற்று தவம் செய்தான். திருமால் நேரில் தோன்றி மேலான பதவியை அளித்தார். அவன் இன்றும் துருவ நட்சத்திரமாய்ப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறான்.

உயிர்க்கெல்லாம் தந்தையாகிய இறைவனை நாடுவதே நாம் பெறும் ஞானமாகும். 'சிறுவன் துருவன் இறைவனை நாடியதுபோலே நாட நான் ஞானம் பெற்றேனோ' என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "துருவனைப்போல தந்தை எங்கே என்றேனோ" என்கிறாள்.

9. மூன்றெழுத்து சொன்னேனோ க்ஷத்ரபந்துவைப் போலே

க்ஷத்ரபந்து என்னும் கொடியவன் நாட்டிலுள்ள ஆடவர், பெண்டிர், குழந்தைகள் அனைவரையும் வதைப்பதையே பொழுது போக்காகக் கொண்டிருந்தான். இவனது தொல்லை பொறுக்காத மன்னன் க்ஷத்ரபந்துவை நாடு கடத்தி காட்டிடை விட்டான். காட்டகத்தும் இவன் கொடிய வாழ்வு வாழ்ந்து வந்தான். ஒருநாள் காட்டிடை இவன் கண்ணில் முன்னைத் தவத்தின் காரணத்தால் ஒரு முனிவர் தென்பட்டார். வயதான அம்முனிவரைக் கண்டதும் க்ஷத்ரபந்து மனமிளகி அவருக்குத் தொண்டு செய்ய முற்பட்டான். முனிவர் அவனை விசாரித்தறிந்தார். கொடிய வாழ்வினின்றும் அவனை மீட்டெடுக்கத் துணிந்தார். அவனிடம் அப்பா நீ செய்யும் பாவச்செயலை இன்றுமுதல் நிறுத்து, நான் உனக்கு மந்திரோபதேசம் செய்கிறேன் என்றார்.

க்ஷத்ரபந்து "சுவாமி நான் தீத்தொழில் செய்தே பழக்கப்பட்டவன் உயிர் வர்க்கங்களை வெட்டிக் கொலை செய்வதே என் வாடிக்கை. பழக்கப்பட்ட நெறியிலிருந்து என்னைமாற்ற என்னாலும் முடியாது தங்களாலும் முடியாது" என்றான்.

முனிவர் அவன்மேல் இரக்கம்கொண்டு "நீ கெட்டவனாயினும் என்னளவில் நல்லவனாக உள்ளாய். நான் உனக்கு மந்திர உபதேசம் செய்கிறேன். அதை இடைவிடாமல் சொல்லிகொண்டு வா" என்று கோவிந்தா எனும் மூன்று எழுத்து திருநாமத்தை அவன் காதில் உபதேசித்தார்.

க்ஷத்ரபந்துவும் இடைவிடாமல் அம் மந்திரத்தை ஜபித்து வந்தான். அதன் பலனாக பல்லாண்டுகள் அவன் செய்த பாவச் செயல்கள் எல்லாம் தீயினில் தூசாக மாறியது. அவன் தூயவனானான்.

'திருமாலை' என்ற பிரபந்தத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார் க்ஷத்ரபந்து வைபவம் பேசுகிறார்.

"மொய்த்த வல்வினையுள் நின்றுமூன்றெ முத்துடையபேரால்
சுத்திரபந்து மன்றே பராங்கதி கண்டுகொண்டான்
இத்தனை அடியரானார்க்கு இரங்குநம் அரங்கனாய
பித்தனைப்பெற்றும் அந்தோ பிறவியுள் பிணங்குமாறே"

"க்ஷத்ரபந்து சொன்ன மூன்றெழுத்து என் வாயில் படவில்லையே" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை, 'க்ஷத்ரபந்துவைப்போலே மூன்றெழுத்து சொன்னேனோ என்கிறாள்.

10. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப் போலே!

கௌதம முனிவரின் மனைவி அகலிகை. இந்திரனின் தீய செயலால் முனிவரால் சபிக்கப்பட்டு கல்லாய்க் கிடந்தாள். ஸ்ரீராமபிரான் விசுவாமித்திரரின் வேள்வி முடித்து மிதிலைக்குச் செல்கையில் ஸ்ரீ ராமன் பாத தூளிபட கல்உருவம் நீங்கிப் பெண்ணுருப்பெற்று ஸ்ரீ ராமனைப் பணித்தாள். உலகளந்த பெருமானின் திருவடி சம்பந்தம் பெற்றேனோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அகலியைப் போலே முதலடியைப் பெற்றேனோ" என்கிறாள்.

11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே!

ஆண்டாள் பெரியாழ்வார் திருமகள். திருத்துழாய் பிறக்கும்போதே மணம் பரப்புவது போலே ஆண்டாள் நாச்சியாரும் இளமைமுதலே எம்பெருமான் பக்கல் இணையில்லா பக்தி கொண்டாள். மானிடவர்க்கென்று பேச்சுப்படின் வாழகில்லேன் என்ற உறுதியுடன் அரங்கனுக்கு ஆட்பட்டாள். பிற ஆழ்வார்களைவிட பிஞ்சாய்ப் பழுத்தாள் ஆண்டாள். இப்படி இளமையிலேயே ஆண்டாளைப் போலே பிஞ்சாய்ப் பழுத்தேனோ என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரானைப் போலே!

ஸ்ரீவில்லிப்புத்தூர் பட்டர்பிரான் மதுரை நகரில் திருமாலே தெய்வமென நாட்டி, கிழியறுத்தார். எம்பெருமானே பெரியாழ்வார்முன் தோன்றி பாராட்டினார். எம்பெருமானின் திருமேனி கண்டதும் பொங்கும் பரிவாலே பல்லாண்டு பாடியருளினார். அதனால் பெரியாழ்வார் எனும் திருநாமமும் பெற்றார். இவர் தமது பாசுரத்தில் "எந்நாள் எம்பெருமான் உன் தனக்கடியோமென்று எழுத்துப்பட்ட அந்நாளே அடியோங்கள் அடிக்குடில் வீடுபெற்று உய்ந்தது" என்கிறார். பல பாசுரங்களில் திருமாலை "எம்பெருமான்" என்கிறார்.

"இப்படி பரம்பொருளைப் பாராட்டினேனோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "பட்டர்பிரானைப் போல எம்பெருமான் என்றேனோ" என்கிறாள்.

13. ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் போலே!

திருமழிசைப்பிரான் கடவுள் ஆராய்சியில் இறங்கி பௌத்தம், சமணம், லோகாயதம், மாயாவாதம் எனும் சமயங்களில் தனித்தனியாகப் படிந்து ஆராய்ந்து ஒழுகி அவற்றின் குறைபாடுகளைக் கண்டு சைவ சமய நெறியில் நின்றார். சிவவாக்கியர் எனும் பெயரில் பல நுல்களைச் செய்தார்.

பின்னர் ஒருக்கால் பேயாழ்வாரைச் சந்தித்து வாதிட்டு நாரணன் நெறியே நல்நெறி எனக்கொண்டு பேயாழ்வாருக்குச் சீடராகி வைணவராய் வாழ்ந்தார்.

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "திருமழிசையார் போலே ஆராய்ந்து விட்டேனோ" என்கிறாள்.

14. அவன் சிறியன் என்றேனோ ஆழ்வாரைப் போலே!

நம்மாழ்வார் இறைவனைப்பற்றி "எம்பெருமானே பூமியும் ஆகாசமும் உன்னுள்ளே இருக்கின்றன. ஆகவே நீ பெரியவனாகிறாய்! நீ என் செவியின் வழியே என்னுள் புகுந்தாய். பெரியவனாகிய உன்னை நான் என் மனத்துளே வைத்தேன். அதனால் நான் பெரியவனா நீ பெரியவனா என்பதை ஆராய்வாய் என்கிறார்.

"புவியும் இருவிசும்பும் நின்னகத்த நீயென்
செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் அவிவின்றி
யான்பெரியன் நீ பெரியை எனபதனை யாரறிவார்
ஊன்பருகு நேமியாய் உள்ளு"

இறைவனை மனத்துள்ளே அடக்கிக் களித்து மகிழ்வதால் "நான் பெரியவன் அவன் சிரியவன்" என்றேனோ என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "ஆழ்வாரைப் போலே அவன் சிறியனென்றேனோ" என்கிறாள்.

15. ஏதேனும் என்றேனோ குலசேகரர் போலே!

மாமன்னராய் இருந்த குலசேகராழ்வார் திருமலையில் தனித்த ஈடுபாடு கொண்டவர். திருமலைப்பிரானைக் கண்டுகளித்து ஆனந்தக் கூத்தாடி திருமலையில்

"கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே"
"மீனாய் பிறக்கும் விதியுடையேனாவேனே"
"செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே"
"தம்பகமாய் நிற்கும் தவமுடைய னாவேனே"
"கானாறாய் பாயும் கருத்துடைய னாவேனே"
"நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே"
"படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே"
"எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே."

என்று எல்லாம் அருளிசெய்தார்.

திருவேங்கட மென்னும் திருமலையோடு தொடர்புடைய உயர்திணை அஃறிணைப் பொருட்களில் ஏதேனும் ஒன்று பெறுவேனாகவேணும் என்கிறார்.

"திருமலையில் ஏதேனும் ஆகப்பெறுவேன் என்று எண்ணங் கொண்டேனோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "குலசேகரர் போலே ஏதேனும் என்றேனோ" என்கிறாள்.

16. யான் சத்யமென்றேனோ கிருஷ்ணனைப்போலே!

மாபாரதத்து வரலாறு இது. அசுவத்தாமன் பாரதயுத்தம் முடிவில் பாண்டவர் குலத்தையே வேரறுக்க எண்ணி உப பாண்டவர்களைக் கொன்றான்.

அபிமன்யுவின் மனைவியாகிய உத்தரையின் கர்ப்பத்தைச் சிதைக்க அபாண்ட அஸ்திரம் ஏவினான். அந்த அஸ்திரத்தினால் அச்சிசு கருகிக் கரிக்கட்டையாய்ப் பிறந்தது. எல்லோரும் வருந்தினர். அதனை வாழ்விக்கக் கருதிய கண்ணபிரான் "நித்திய பிரம்மசாரியாய் இருப்பவன் இக் கரிக்கட்டையைத் தொட்டால் அக் கரிக்கட்டை உயிர்பெற்று எழும்" என்று கூறினார். ஒருவரும் "நான் நித்திய பிரம்மசாரி" என்று கூற முன்வரவில்லை.

ஆனால் கண்ணபிரான் பதினாறாயிரம் தேவிமார்களைப் பெற்றிருந்தும் "யானே நித்திய பிரம்மசாரி" என்று கரிக்கட்டையைத் தொட்டார் அது உயிர்பெற்றெழுந்தது.

பெரியாழ்வார் இத்திருவிளையாடலைத் தம் திருமொழியில் "உத்தரை தன் சிறுவனையும் உய்யக்கொண்ட உயிராளன்" என்று அருளிச் செய்கிறார்.

திருவரங்கமாலையில் பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் இச்செய்தியினை

"நெட்டரவின் பெருமூச்சுஎழ வீசுநெருப்பில் வெந்து
பட்டகடம்பும் தழைத்ததுமீளப் பசுந்துளவின்
மட்டுஅவிழ் தொங்கல்அரங்கர் பெற்றாள்பட வாளிவெந்தீ
சுட்டகருங் கட்டையும்பெற்றது ஆர்உயிர் சொல்வது என்னே"

என்று வியக்கிறார்.

"நானே சத்யம் என்று துணிந்து கூற வாய்ப் புண்டோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "யான் சத்யமென்றேனோ கிருஷ்ணனைப் போலே" என்கிறாள்.

17. அடையாளம் சொன்னேனோ கபந்தனைப் போலே!

கபந்தன் கோர உருவம் கொண்ட ஒரு அரக்கன். அவனுக்குத் தலையுமில்லை, கால்களுமில்லை. பெரிய வயிறும், மிக நீண்ட இரு கைகளுமே அவன் உருவம். வயிற்றுக்குள்ளேயே அவனுக்கு ஒரு பெரிய வாய் உண்டு. மார்பிலே ஒரு கண் உண்டு. காட்டில் ஒரு இடத்தில் அசையாமல் இருந்துகொண்டு இரண்டு கைகளையும் நீட்டி அவற்றுள் அகப்படும் ஜந்துக்களை வயிற்றுக்குள் போட்டுக்கொண்டு தின்றுவிடுவான். பார்க்கச் சகிக்காத கோர உருவம் கொண்ட கபந்தனிடம் கானகத்தில் சீதாபிராட்டியைத் தேடிக்கொண்டு போகையில் இராம லஷ்மணர்கள் அகப்பட்டுக் கொண்டார்கள். அரக்கனிடம் அகப்பட்ட இருவரும் சிறிது நேரம் திகைத்தனர். பிறகு இராம லஷ்மணர்கள் அரக்கனின் இரு கரங்களையும் வெட்டித் தள்ளினர்.

கபந்தன் கரங்கள் வெட்டப்பட்டதும் அவனுக்குத் தன் முற்பிறவி நினைவு வந்தது. இராம லஷ்மணர்களைப் பார்த்து அவன் சொன்னான் "என்னுடைய தீச்செயலினால் இந்திரனால் சாபம் பெற்று இக்கோர உருவத்தோடு வாழ்ந்து வருகிறேன். என் கரங்களை வெட்டிய உங்களை இராம இலக்குவர்கள் என அறிந்துகொண்டேன். உங்களால் நான் சாப விமோசனம் பெற்றேன்" இவ்வாறு கூறிய அவன் கோர வடிவம் நீங்கி சுய வடிவுடன் வெளிப்பட்டான். இராம இலக்குவரிடம் "சீதையைத் தேடிவரும் நீங்கள் விரைவில் சீதையை அடைவீர்கள். ரிஷியமுகப் பர்வதத்தில் வசித்துவரும் வானர மன்னனாகிய சுக்ரீவனைத் தொடர்புகொண்டால் உங்கள் காரியம் கை கூடும்" என்று சொல்லி விமானம் ஏறி விண்ணுலகு சென்றான்.

"துயரமுற்றவர் மனத்தை ஆற்றி துயர் நீங்கும் வகையையும் எடுத்துரைத்தேனோ "என்றுசொல்லி" கபந்தனைப்போலே அடையாளம் சொன்னேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

18. அந்தரங்கம் சொன்னேனோ திரிஜடையைப் போலே!

திரிஜடை அரக்கர்குலப் பெண். விபீஷணனின் மகள். அறமும் இரக்கமும் அற்ற இராவணன் குலத்தில் தோன்றிய புனிதவதி.

அசோக வனத்தில் இராவணனால் அல்லல்பட்ட சீதைக்கு உயிர்த் தோழியாய்த் திகழ்ந்தாள் திரிஜடை. இராவணனும் மற்ற அரக்கியரும் கணவனைப் பிரிந்த சீதையை அல்லல் படுத்தியபோது நல்லுரைகளால் சீதையை அமைதிப்படுத்தினாள் திரிஜடை.

பல்வேறு நிலைகளில் சீதையின் கற்பினைச் சோதிக்க இராவணன் வந்தபோதெல்லாம், "விரும்பா மாதரைத் தீண்டின் இராவணன் தலை வெடிக்கும்" என்ற அந்தரங்கம் கூறி சீதையின் மனத்துயரை மாற்றினாள்.

மாயா சனகன் சீதையை மிரட்டியபோதும் உண்மை நிலையை சீதையிடம் கூறி அமைதிப்படுத்தினாள்.

"அன்ன சாபம் உளதென ஆண்மையான்
மின்னு மௌலியன் மெய்ம்மையன் வீடணன்
கன்னி,என் வயின் வைத்த கருணையால்
சொன்ன துண்டு துணுக்கம் அகற்றுவாள்"
என்று சீதை திரிஜடையைப் புகழ்கிறாள்.

மற்றவர்களின் துயரம் நீங்க நல்ல மனம் பெற்று உண்மைச் செய்திகளைச் சொன்னேனோ என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "திரிஜடையைப் போல அந்தரங்கங்கம் சொன்னேனோ" என்கிறாள்.

19. அவன் தெய்வம் என்றேனோ மண்டோதரியைப் போல

மண்டோதரி இராவணன் மனைவி. தலைசிறந்த கற்புடையவள். இராவணனின் தீய செயலை மனைவி என்ற நிலையில் மறைத்து "ஏந்துபுயத்து இராவணனார் காதல்" என்றும்" என்னேயோ என்னேயோ இராவணனார் முடிந்த பரிசு" என்றும் பாசம் தோன்றக் கூறியவள்.

தன் கணவனின் புண்ணுற்ற உடலைக்கண்டு புலம்பிய நிலையில் மெய்ஞ்ஞானம் பெற்று உயிர்துறந்த உத்தமி.

"என்றழைத்தனள், ஓங்கிஎழுந்து அவன்
பொன்தழைத்த பொருவரும் மார்பினைத்
தன்தழைக் கைகளால் தழுவத்தனி
நின்றழைத்து உயிர்த்தாள் உயிர்நீங்கினாள்"

என்பார் கம்பர்.

உயிர் நீங்கும் நிலையில் கணவர் உயிர்கொண்ட கரியமேனிப்பிரானை, பரம்பொருளே என மெய்ம்மை உணர்ந்து உயிர் துறந்தாள்.

"ஆராஅமுதாய் அலைகடலிற் கண்வளரும்
நாராயணன் என்றிருப்பேன் இராமனைநான்"

இப்படி நல்லறிவு பெற்றேனோ இறைவனை உள்ளவாறறிய என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "மண்டோதரியைப் போலே அவன் தெய்வம் என்றேனோ" என்கிறாள்.

20. அகம்வேத்மி என்றேனோ விசுவாமித்திரனைப் போலே!

இராவண வதம் செய்வதற்காக அயோத்தியில் அவதரித்த இராமபிரானை, அயோத்தியினின்றும் அழைத்துச் செல்ல வருகிறார் விசுவாமித்திரர். சித்தவனத்தில் தான்செய்யும் யாகத்தைத் தடைசெய்யும் அரக்கர்களை விலக்க தசரத குமாரர்கள் நால்வரினும் கரிய செம்மலான இராமனைக் கேட்கிறார். இராமனின் இளமைப் பருவம் எண்ணிய தசரதர் இராமனை அனுப்ப மனமில்லாமல் தானே யாகம் காக்க வருவதாகக் கூறுகிறார்.

விசுவாமித்திரர் கோபம்கொண்டு "நீ நினைப்பது போல இராமன் சிறியவன் அல்லன். அறப்பெரியவன். தசரதனே! இவன் யாரென்பதை "அஹம்வேத்மி" நானே அறிவேன். இவன் பராக்கிரமசாலியும் மகாதேஜஸ் உடையவன் என்றும் நான் அறிவேன்; வசிஷ்டரும் அறிவார்" என்று கூறினார். வால்மீகி ராமாயணத்தின் "அகம்வேத்மி" சுலோகம் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளையின் தனி சுலோகத்தில் விரிவாகப் பேசப்படுகிறது.

இப்படி "நான் அறிவேன்" அஹம்வேத்மி என்று விசுவாமித்திரனைப் போல என்றேனோ என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

21. தேவுமற்றறிவேனோ மதுரகவியார் போலே!

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான மதுரகவி யாழ்வார், நம்மாழ்வார் திருவடியைப் பற்றியவர். பிற ஆழ்வார்கள், ஸ்ரீ நாராயணனைப் பாட மதுரகவியாழ்வார் நம்மாழ்வாரையே பாடியவர். பகவத் பக்தியிலும் பாகவத பக்தியே ஏற்றம் எனக் காட்டிய அருளாளர். "கண்ணிநுண் சிறுத்தாம்பு" எனும் திவ்விய பிரபந்தத்தைப் பாடி "தேவுமற்றறியேன்" என்றருளி பேரின்ப வீடுபெற்றவர்.

"ஆசாரியனே நமக்குத் தெய்வம். இவனினும் மிக்க தெய்வம் இல்லை" என்று உறுதிகொண்டேனோ என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "தேவுமற்றறிவேனோ மதுரகவியார் போலே" என்கிறாள்.

22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியாரைப் போலே!

ஸ்ரீமன் நாராயணன் கண்ணனாக அவதாரம் கொண்டபோது தேவகியார் திருவயிற்றில் அவதரித்தான்.

தன் சகோதரியான தேவகி வயிற்றில் பிறக்கும் குழந்தையால் தனக்கு மரணம் வரும் என அறிந்த கம்ஸன் தேவகியையும் வசுதேவரையும் கொடிய சிறையில் அடைத்து வதைத்தான்.

தேவகியின் திருவயிற்றில் எட்டாவது குழந்தையாக சிறைக்கூடத்தில் எம்பெருமான் அவதரித்தான். "என்ன நோன்பு நோற்றனளோ இவனைப்பெற்ற

வயிறுடையாள்" என அருளாளர்கள் அதிசயிக்க ஏற்றம்பெற்றவள் தேவகி. அண்டமெல்லாம் தாங்கும் அற்புத வடிவினனைப் பத்து மாதம் தாங்கிய இவளை "ஒருத்தி" என்பாள் ஆண்டாள் நாச்சியார். தவத்தின் பயனாகக் கண்ணனைப் பெற்றாள் தேவகி. இவ்வாறான அரிய பக்தியால் பெரியதை...ற விருப்பம் கொண்டிலனே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "தேவகியாரைப் போலே தெய்வத்தைப் பெற்றேனோ" என்கிறாள்.

23. ஆழிமறை என்றேனோ வசுதேவரைப் போலே!

சிறைக்கூடத்தில், கம்ஸனின் கட்டுக் காவலில் தேவகியின் எட்டாவது குழந்தையாக எம்பெருமான் பிறந்தார். பெருமானின் திருமேனி அழகு கண்ட தேவகியார் இக்குழந்தையையும் கம்ஸன் கொன்று விடுவானோ என அஞ்சினாள். சங்கு சக்கரத்துடன் அவதரித்த கண்ணனைக் கண்ட வசுதேவர் "பெருமானே, தீய கம்சன் தனக்கு மரணம் வருமெனக் கருதி உன்னைக் கொல்லக் காத்திருப்பதால் நீ யார் என்று அவன் அறியாவண்ணம் உன்னுடைய திவ்வியாயுதமாகிய சக்கரத்தை (ஆழியை) மறைத்துக் கொள்வாயாக" என்று வேண்டினார். எம்பெருமானே பிறந்துள்ளார் என்பதை ஆழியும் சங்கும் கண்டு அறிந்தாலும் அவன் மீதுள்ள பரிவினாலே இந்தத் திருமேனிக்குத் தீங்கு வரக்கூடாதே என்று வசுதேவர் பயந்தார். கண்ணபிரானும் அவ்வாறே ஆழியை மறைத்து, பிறந்தவுடனே தந்தை சொல் பேணினார்.

சர்வ வல்லமையுடைய இறைவனுக்கும் என்ன நேரிடுமோ என்று அச்சமுறுமாறு எனக்குப் பரிவு உண்டோ? "வசுதேவரைப்போலே ஆழிமறை யென்றேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

24. ஆயனை வளர்த்தேனோ யசோதையாரைப் போலே!

கண்ணன் தேவகியார் திருவயிற்றில் பிறந்து ஆயர்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் தன் தந்தையான வசுதேவரால் கொண்டுவிடப்பட்டான். "ஒருத்தி மகனாய்ப்பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய்" ஒளித்து வளரலானான்.

கண்ணனைக் கொல்ல கம்ஸன் ஏவிய பல அரக்கர்களின் தொல்லைகளினின்றும் மீள யசோதை பல்லாற்றாலும் முயன்றாள். ஏரார்ந்த கண்ணி யசோதை கண்ணனின் தீம்புகண்டு உகந்ததோடு அவனைக் காப்பாற்ற பட்டபாடு விரிக்கிற் பெருகும். தாய் நிலையில் அவள் பட்டபாட்டைத் தன் நிலையில் ஆழ்வார்கள் பிரபந்தத்தில் பலவாறு அருளி செய்துள்ளார்கள்.

இறைவனிடம் இப்படிப்பட்ட பிரிவு எனக் கில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "யசோதையாரைப் போலே ஆயனை வளர்த்தேனோ" என்கிறாள்.

25. அநுயாத்திரை செய்தேனோ அணில்களைப் போலே!

ஸ்ரீ ராமபிரான் சீதையை மீட்க இலங்கைக்குச் செல்லக் கடலில் அணை கட்டினார். சேதுபந்தனம் செய்வதில் வானர வீரர்களான அநுமான். அங்கதன். நளன் போன்றோர் பெரிய மலைகளையும் குன்றுகளையும் கொண்டுவந்து கடலில் போட்டனர். அப்போது அதனைக்கண்ட அணிலானது அவர்கள் செய்யும் கைங்கர்யத்தில் தானும் ஈடுபட நினைந்து தன்னாலானதைச் செய்தது. நீரில் குதிப்பது, மணலில் புரள்வது பின் அணைகட்டும் இடத்தில் புரண்டு தன் மேலிருக்கும் மணலை உதிர்ப்பது என்று இப்படிச் செய்தது.

அணிலின் கைங்கர்ய உணர்வு கண்ட இராமபிரான் மகிழ்ந்து தன் திருக்கரத்தால் தடவிக்கொடுத்தார். ஒரு அணிலின் கைங்கர்யத்தால் எல்லா அணில்களின் உடம்பிலும் ராமன் கைத்தழும்பு மூன்று கோடுகள் காணக் கிடைக்கின்றன.

நாம் எந்த நிலையிலும் நின்றாலும் இறைத்தொண்டு செய்யவேண்டும் என்பதனையே அணில்கள் காட்டின.

தொண்டரடிப் பொடியாழ்வார் தம் திருமாலையில்
"குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடித்
தரங்கநீர் அடைக்கலுற்ற சலமிலா அணிலும்போலேன்"
என்றார்.

அணில்கள் போன்ற பரிவு இறைவன் விஷயத்தில் தனக்கு ஏற்படவில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அனுயாத்திரை செய்தேனோ அணில்களைப் போலே" என்கிறாள்.

26. அவல் பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே!

கண்ணனும் குசேலரும் இளம்பருவத்தில் சாந்தீபினி முனிவரிடத்தில் கல்வி கற்றவர்கள். கண்ணபிரான் துவாரகையை அரசாண்டு வந்தான். குசேலரோ சுசீலை என்னும் பெண்மணியை மணந்து இருபத்தேழு குழந்தைகளைப் பெற்று வறுமையால் கஷ்டப்பட்டார்.

ஏழைக் குசேலரின் மனைவி தங்கள் வறுமை நோய் களைய குசேலரைத் துவாரகாபுரி மன்னனைக் கண்டுவர வேண்டினாள். பெரியவர்களைக் காண வெறுங்கையுடன் செல்லலாகாது என்ற நிலையில் கொஞ்சம் அவல் தயாரித்துக் கொடுத்து அனுப்பினாள்.

இந்தக் காரணத்திலாவது கண்ணனைக் காணலாமே என்ற அவாவினால் குசேலர் நடந்தே துவாரகை சென்றார். கண்ணபிரானைக் கண்டார். கண்ணன் குசேலரைக் கண்டதும் மகிழ்வுற்று எழுந்து வரவேற்று "நடந்த கால்கள் நொந்தவோ" என்று குசேலரின் கால்களை வருடினார்.

தான் கொணர்ந்த அவலை எப்படிக் கொடுப்பது என்று வெட்கப்பட்டுக் கொண்டிருந்த குசேலரிடமிருந்து தானே அவலை வாங்கிஉண்டு அகமகிழ்ந்தான் கண்ணன். ஏழைக் குசேலரின் வெறும் அவலை உண்டு வாழ்நாள் கவலையைப் போக்கினான்.

இறைவன் வழிபாட்டிற்கு எளியவன் இலையோ பூவோ புகையோ நீரோ அன்பினால் அளிப்பதை ஏற்று அருள்பவன். அப்படிப்பட்டவனை வழிபட இவ்வாறு கையில் கிடைப்பதைக் கொண்டு முன்வந்தேனோ? என்று "குசேலரைப் போலே அவல் பொரியை ஈந்தேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

27. ஆயுதங்கள் ஈந்தேனோ அகஸ்தியரைப் போலே!

அகஸ்தியர் ஆற்றல்சால் முனிவர். ஸ்ரீஇராம பிரானும் லட்சுமணரும் சீதாப்பிராட்டியும் அகஸ்தியரது ஆசிரமத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ இராமனின் வருகையை முன்கூட்டியே தெரிந்த அகஸ்தியர் சென்று வரவேற்று தனது ஆஸ்சிரமத்திலேயே வசிக்குமாறு வேண்டினார். ஸ்ரீராமன் கானக வாழ்வையே விரும்பியபோது தன்னிடமுள்ள அஸ்திரங்களையும் தெய்வ ஆயுதங்களையும் கொடுத்து வழியனுப்பினார்.

இராவண வதம் எனும் தேவகாரியமாக அவதரித்த எம்பெருமான் திருவுளம் அறிந்து அகஸ்தியர் ஆயுதங்களைப் பெருமானுக்கு அளித்தார்.

இவ்வாறான உதவி அடியேனால் செய்ய இயலாதே என்று "அகஸ்தியர் போலே ஆயுதங்கள் ஈந்தேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

28. அந்தரங்கம் புக்கேனோ சஞ்சையனைப் போலே!

சஞ்சயன் திருதராஷ்டிரனுடைய அந்தரங்க நண்பன். வேதமுனி. போர்க்களச் செய்தியை ஞானக்கண்ணால் தெரிந்து கொண்டு தன் நண்பனுக்கு அந்தரங்கமாய் சொல்லி வந்தான். பாண்டவர்க்கும் வேண்டியவன். வணங்காமுடி மன்னனான துரியோதனனும் மரணமுறும் முன், சஞ்சையன் திருவடியில் வீழ்ந்து வணங்கினான்.

சஞ்சயன், தனது செயல் யாவும் அந்தரங்க சுத்தியானது என்றான். இதுபோல நான் செய்வனவற்றை உள்ளன்போடு செய்கிறேனா என்கிறாள், "சஞ்சயனைப் போலே அந்தரங்கம் புக்கேனோ" என்ற திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

29. கர்மத்தால் பெற்றேனோ ஜனகரைப் போலே!

மிதிலைப் பேரரசரான ஜனகர் ஞானமே வடிவானவர். கருமமே கண்ணானவர். ஒருக்கால் சில முனிவர்களுடன் மிதிலைக்கு அருகில் ஓரிடத்தில் யாக்ஞவல்கரிடம் பிரம்ம வித்தையைப்பற்றி ஆய்வு செய்துகொண்டிருந்தார். யாக்ஞவல்க்யர் கூடியிருந்தோரின் குணநலங்களைக் காணவிரும்பி ஒரு உபாயம் செய்தார். அருகில் உள்ள மிதிலை நகர் தீப்பிடித்து எரிவதாக இரு வீரர்களைக் கூக்குரல் இடச்செய்தார். குரல் கேட்டதும் கூடியிருந்த முனிவர்கள் அனைவரும் மிதிலை தீப்பிடித்தால் தங்களது கமண்டலம், ஆடை முதலியன அழிந்து போகுமே என்று பதறி ஓடினர். ஆனால் ஜனகர்

மாத்திரம் இருந்த இடத்தை விட்டு அகலவில்லை. யாக்ஞவல்க்யர் இதுபற்றி கேட்டபோது ஜனகர் "என்னுடையது என்று எதுவும் கிடையாது. எல்லாம் எம்பெருமான் உடமையல்லவா" என்றார்.

தாம் கற்றதை செயலால் நடத்திக்காட்டினார். அனுஷ்டான சீலராக இருந்ததாலேயே சீதாபிராட்டியை வளர்க்கவும் ஸ்ரீ இராமனுக்கு மாமனாராகவும் பாக்கியம் பெற்றுத் திகழ்ந்தார்.

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை இதைத்தான் "ஜனகரைப் போலே கர்மத்தைப் பெற்றேனோ" என்கிறாள்.

30. கடித்து அவனைக் கண்டேனோ திருமங்கையார் போலே!

திருமங்கையாழ்வார் திருக்குறையலூர் திருத்தலத்தில் கார்த்திகையில் கார்த்திகை நாள் அவதரித்தவர்.

மல்லாண்டதிண்தோள் மார்பினனான இவரை சோழ மன்னன் திருமங்கை நாட்டிற்குச் சிற்றரசனாக நியமித்துப் பணிகொண்டான். சிற்றரசராக இருந்த இவர் சிற்றின்ப வேட்கையராகவுமிருந்தார்.

அந்நாட்டில் திருவெள்ளக்குளம் திருப்பதியில் வாழ்ந்த குமுதவல்லி என்பவளைத் திருமணம் புரிந்துகொள்ள திருமங்கை மன்னன் விரும்பினான். பல்கால் முயற்சித்து ஒருநாள் குமுதவல்லியிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தான். அவள் பஞ்ச ஸம்ஸ்காரம் செய்துகொண்ட ஸ்ரீவைஷ்ணவனுக்கே நான் ஆட்படுவேன்" என்று தன் கருத்தைக் கூறினாள்.

அதுகேட்ட மங்கைமன்னன் திருநறையூர் சென்று எம்பெருமானைப் பிரார்த்தித்து அப்பெருமானிடமிருந்து பஞ்ச ஸம்ஸ்காரங்களையும் பெற்று பரம வைஷ்ணவராய்த் திருவெள்ளக்குளத்திற்கு வந்தார். மீண்டும் குமுதவல்லி "நீர் ஒரு வருஷகாலம் தினமும் 1008 வைணவர்களுக்கு அமுது செய்வித்து ஸ்ரீ பாததீர்த்தம் ஏற்றாலன்றி உம்மைக் கணவராக ஏற்கமாட்டேன்" என்று கூறினாள். குமுதவல்லிமீது கொண்ட மையலால் திருமங்கை மன்னன் அதற்கு உடன்பட்டு சபதம் செய்துகொடுத்து அவளைத் திருமணம் செய்துகொண்டார்.

ஒப்புக்கொண்ட நியமனத்தின்படி தினமும் 1008 வைணவர்களை அமுது செய்துவித்து வந்தார். தம்வசம் உள்ள பொருள்கள் யாவும் தீர்ந்த பின்னர் அரண்மனை செல்வத்தையும் அதற்கே செலவிட்டார். மேலும் அமுதருத்த பணமில்லாமையாலே திருடியாவது திருமாலடியாரைப் பேணத்துவங்கினார். அன்பர்களைத் துணைக்கழைத்துக் கொண்டு காட்டு வழிகளில் பதுங்கியிருந்து வழிப்பறி கொள்ளை நடத்திவரலானார். அதன்மூலம் வரும் செல்வத்தால் திருமாலடியார்களை உபசரித்து வந்தார்.

தன்னடியார் திறத்தகத்து, திருமங்கை மன்னன் காட்டும் அன்புகண்டு அவனை ஆட்கொள்ளத் திருவுளம் பற்றினான் எம்பெருமான். மங்கை மன்னன் தன்னை வழிப்பறிக்குமாறு தானும் பிராட்டியுமாய் திருமணத் தம்பதிகள் போல் கோலம் பூண்டு விலையுயர்ந்த நகைகள் அணிந்து இவர் பதுங்கியிருக்கும் வழியில் வந்தான். மரத்தடியில் பதுங்கியிருந்த மங்கை மன்னன் திருமணத்

தம்பதிகளை வழிமறித்து அணிகளை எல்லாம் கழற்றிக்கொண்டான். மணமகள் காலில் அணிந்திருந்த கணையாழி மோதிரத்தைக் கழற்ற முடியாமல் பற்களால் கடித்து வாங்கினான். இம்மிடுக்கைக் கண்ட மணக்கோலம் பூண்ட எம்பெருமான், 'கலியனோ' என்றழைத்தார்.

புதுமணத் தம்பதிகளிடமிருந்து வழிப்பறி செய்த பொருட்களை எல்லாம் மூட்டை கட்டித் தூக்க முயலும்போது அது மலைபோல நிலையா யிருக்கக் கண்டான் மங்கைமன்னன். பலசாலியான கலியன் வியப்புற்று, மணமகனிடம் "நீ ஏதோ மந்திரம் பண்ணியுள்ளாய் அதனை எனக்குச் சொல்லு" என வாளைக்காட்டி அச்சுறுத்திக் கேட்டார். ஆட்கொள்ளும் தருணம் எதிர்நோக்கியிருந்த எம்பெருமானும் மந்திரத்தை உனக்குச் சொல்லுகிறேன்" என்று வேதசாரமானதும் நலம் தரும் சொல்லானதுமான திருஎட்டெழுத்து மந்திரத்தை உபதேசித்தார். பின்னர் மணக்கோலம் நீக்கி திருமகளுடன் காட்சி கொடுத்தார் எம்பெருமான்.

எம்பெருமானிடமிருந்தே திருமந்திர உபதேசம் பெற்றதாலும் திருமேனி கண்டதாலும் திருவடியில் உள்ள கணையாழியைக் கழற்றுவதற்காக தாமரையன்ன திருவடியில் வாய் வைத்து கடித்ததாலும் மங்கைமன்னன் திருமங்கை ஆழ்வாரானார். இப்படி பலவந்தமாக ஏதேனும் செய்து, நலம்தரும் சொல்லான நாராயணாவென்பதை நான் கண்டுகொள்ளவில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "திருமங்கையார் போலே கடித்து அவனைக் கண்டேனோ" என்கிறாள்.

31. குடைமுதலானது ஆனேனோ அனந்தாழ்வான் போலே!

ஆயிரம் தலையுடைய ஆதிசேஷன் அகலகில்லேன் இறையுமென்று எப்பொழுதும் எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து கொண்டிருப்பவன்.

எம்பெருமான் நடந்தால் குடையாகவும், இருந்தால் சிங்காசனமாகவும், நின்றால் திருவடிகளுக்குப் பாதுகையாகவும், திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளும் போது படுக்கையாகவும், ஒளிகொடுக்கும் மணிவிளக்காகவும், பூம்பட்டாகவும், சாய்வதற்கு அணையாகவும் என்றிவ்வாறாக எம்பெருமானுக்குப் பயன்படுகிறான் ஆதிசேஷன்.

"சென்றால் குடையாம்: இருந்தால் சிங்காசனமாம்;
நின்றால் மரவடியாம்: நீள் கடலுள் – என்றும்
புணையாம்: மணிவிளக்காம்: பூம்பட்டாம்: புல்கும்
அணையாம் திருமாற் கரவு.

இதனையே "எல்லா வகையிலும் இறைவனுக்குக் கைங்கரியம் செய்ய முற்பட்டேனோ" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அனந்தாழ்வான் போலே குடைமுதலானது ஆனேனோ" என்கிறாள்.

32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப் போலே!

ஸ்ரீ ராமபிரான் இராவணனோடு யுத்தம் செய்த வேளையில் இராவணன் தேரின்மீதிருந்து யுத்தம் செய்தான். இராமபிரான் தரையிலிருந்து யுத்தம் செய்ய நேரிட்டது. இது சரியன்று என்று அனுமான் நினைத்து அவரைத் தம் தோளின்மேல் ஏற்றிக்கொண்டு யுத்த களத்தில் திரிந்தான்.

எப்போதும் பெருமானைத் தாங்கிச் செல்வதனால் கருடாழ்வார் பெரியதிருவடி எனப்படுவார். இராமாவதாரத்தில் தாங்கியதனால் அனுமனைச் சிறிய திருவடி என்பது வழக்கம்.

அநுமன்மேல் இராமன் அமர அநுமன் அவரை ஏற்றுந் திரிந்தான். அநுமனைப்போலே எம்பெருமானுக்கு உகப்பானது செய்ய அடியேனுக்கு வாய்ப்பு இல்லையே என்ற ஆதங்கத்தில் திருவடியைப் போலே கொண்டு திரிந்தேனோ என்கிறாள்.

33. இளைப்புவிடாய்தீர்த்தேனோ நம்பாடுவான் போலே!

திருக்குறுங்குடியில் வாழ்ந்த நம்பாடுவான் தாழ்ந்த குலத்துதித்த ஸ்ரீவைணவன். தினமும் இரவில் விழித்திருந்து எம்பெருமான் புகழ்பாடி விடியலில் திருக்கோயில் சென்று வெகு தொலைவில் நின்று திருப்பள்ளி எழுச்சிபாடும் இயல்பினன். பல்லாண்டுகள் இந்தத் திருத்தொண்டில் ஈடுபட்டுவந்த நம்பாடுவான் ஒரு கார்த்திகை மாதத்து ஏகாதசியில் எம்பெருமான் திருமுன்பு பாடச் செல்லுகையில் ஒரு பிரமராஷஸ் வழியில் மறித்து அவனைப் புசிக்க முயன்றது. நம்பாடுவான் "நீ என்னைப் புசிப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை. இன்று ஏகாதசி. எம்பெருமானைப் பாடித் துதித்து பின்புவந்து உனக்கு உணவாகிறேன்" என்றார். பிரமராக்ஷஸ் "நீ வராவிட்டால் என்னாவது, உன் வார்த்தையை எப்படி நம்புவது" என்றது. அதற்கு நம்பாடுவான் பல்வேறு சத்திய வாக்குகளைப்

புகன்றான். இவ்வாக்குகள் கைசிகபுராணத்தில் சிறப்பாக உள்ளன இவ்வாக்குகளால் மனது ஈர்க்கப்பட்ட பிரம்மராக்ஷஸ் நம்பாடுவானைக் கோயிலுக்குச் செல்ல அனுமதித்தது. அவன் சென்று பண்ணாரப் பாடி திருப்பள்ளி உணர்த்தி வந்து பிரமராக்ஷஸிடம் தன்னை இஷ்டப்படி உண்ணுமாறு வேண்டினான்.

முதற்பிறவியில் சோமசர்மா எனும் அந்தணன் பிழைபட யாகம் செய்ததால் பிரமராஷஸ் வடிவம் பெற்றிருந்தான். சொன்ன சொல் தவறாத பாகவத உத்தமனைக் கண்டதும் அதற்கு ஞானம் ஊண்டாயிற்று. உடனே அது நம்பாடுவானைப் பார்த்து "நீ ஒருநாள் பாடிய பாட்டின் பலனைக் கொடு உன்னை விட்டுவிடுகிறேன்" என்றது. நம்பாடுவான் "நான் பலன் பார்த்துப் பாடவில்லை" என்றான். அதன்மீது இரக்கம் கொண்ட நம்பாடுவான் அன்றிரவு பாடிய பண்களில் கைசிகம் என்ற பண்ணின் பலனைக் கொடுத்தான். அப்பலனால் பிரமராக்ஷஸ் தன் பாபம் நீங்கிப் பசிப்பிணி பிறவிப்பிணி எனும் இளைப்புவிடாய்த் தீர்ந்து பேரின்பம் பெற்றது.

இன்னாசெய்தார்க்கும் இனியவே செய்கின்ற இயல்புடைய மெய்யடியரான நம்பாடுவானை நினைந்து திருக்கோளூர்ப் பெண்பிள்ளை நம்பாடுவான் போல "இளைப்பு விடாய்த் தீர்த்தேனோ" என்கிறாள்.

34. இடைகழியே கண்டேனோ முதலாழ்வார்களைப் போலே!

முதலாழ்வார்கள், பொய்கையார், பூதத்தார் பேயாழ்வார். மூவரும், ஒருநாள் திருக்கோவிலூர் திருத்தலத்தில் ஒன்று சேர்ந்தனர்.

இரவில் பொய்கையாழ்வார் ஒரு ஆசிரமத்து இடைகழியில் தூங்கிக்கொண்டிருந்தார். அது ஒருவர் படுக்கவும் இருவர் இருக்கவும் மூவர் நிற்கவும் உரிய சிறிய இடம்.

கொஞ்சநேரம் சென்றதும் அவ்விடத்திற்கு, பூதத்தாழ்வார் வந்துசேர்ந்தார் பூதத்தாழ்வாரை வரவேற்றார் பொய்கையார். தாம் எழுந்து அவ்விடத்தில் இருவருமாக உட்கார்ந்திருந்தனர்.

அச்சமயம் மூன்றாமவரான பேயாழ்வார் அவ்விடைகழி பக்கம் வந்து சேர்ந்தார். நள்ளிரவில் வந்த அவரை இருவரும் வரவேற்று வந்தனை செய்தனர். அச்சிறிய இடத்தில் மூவரும் நெருங்கி நின்றுகொண்டு தம்மில் பரஸ்பரம் இறைபுகழ் பேசவும் கேட்பதுவுமாக இருந்தனர்.

மூன்று மெய்யடியார்கள் ஒருசேர நின்று கொண்டிருக்கும் இவ்வேளையைப் பயன்படுத்தி இவர்களை ஆட்கொள்ள ஸ்ரீமன்நாராயணன் அவ்விரவில் பெரிய திருமேனியோடு எழுந்தருளி அவர்களிடையே நின்று நெருக்கத்தை உண்டு பண்ணினான்.

மூவர்மட்டும் நெருங்கி நின்றுகொண்டிருக்கும் இடத்தில் நாலாமவர் யார் என ஐயுற்ற பொய்கையாழ்வார் "வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரே விளக்காகக்" கொண்டு விளக்கேற்றினார். பூதத்தாழ்வார் 'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா ஞானத் தீபம்' ஏற்றினார். இருவரும் ஏற்றிய தீப ஒளியில் பேயாழ்வார் "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று எம்பெருமானின் திருமேனி வண்ணம் கண்டார். மூவரும் உலகளந்த உத்தமனின் திருமேனித் தொடுதல் பெற்றது மன்றி இடைகழியே கண்டு மகிழ்ந்து தம்பேற்றைப் பிரபந்தமாக உலகிற்கு வழங்கினார்.

இருட்டு வேளையிலும் இடைகழியில் எம்பெருமான் அருள்பெற்ற முதல்வாழ்வார்களைப்போல தான் இல்லையே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

35. இருமன்னர் பெற்றேனா வால்மீகரைப் போலே!

ஸ்ரீ இராமபிரான் உலக அபவாதத்தினால் பிராட்டியை கொண்டுபோய் வனத்தில் விட்டுவிட்டு வரும்படி இலக்குவருக்கு கட்டளையிட்டார். அப்போது சீதாபிராட்டி நிறைமாத கர்ப்பிணி.

வால்மீகி சீதையைத் தமது ஆசிரமத்தில் இருத்திப் பேணிக்காத்து வந்தார். வால்மீகர் ஆசிரமத்திலேயே ஒரு குழந்தை பிறந்தது.

முனிவர் அருளினால் குழந்தை சிறப்பாக வளர்ந்து வருகையில் ஒருநாள் சீதை குழந்தையை முனிவரது பார்வையில் விட்டுவிட்டு தண்ணீர் எடுத்துவர வெளியில் செல்ல நேரிட்டது. அச்சமயம் முனிவர் தியானத்தில்

இருப்பதை நினைந்து குழந்தைக்குக் காட்டு மிருகங்களால் தீங்கு வருமோ எனப் பயந்து மீள வந்து குழந்தையை எடுத்துக்கொண்டு நீர்நிலை சென்றாள்.

கொஞ்ச நேரம் சென்றதும் வால்மீகர் கண்விழித்துப் பார்த்தார். குழந்தையைக் காணாது திகைத்தார். குழந்தையைக் காணாமையால் சீதாபிராட்டி வருந்துவாளே என நினைந்து தன் தவ வலிமையால் ஒரு தர்ப்பயைக் கிள்ளிப்போட்டு ஒரு குழந்தையை உண்டாக்கினார். தண்ணீர் எடுத்துவரப்போன பிராட்டியார் குழந்தையுடனே வந்தார்.

வால்மீகர் ஆசிரமத்தில் இப்படி நிகழ்ந்தது. இரு குழந்தைகளின் தோற்றம் லவன் குசன் எனப் பெயரிட்டு சகல கலைகளையும் வால்மீகர் இக்குழந்தைகளுக்குக் கற்பித்தார். தமது இராமாயணத்தை முதலில் இவர்களுக்கு உபதேசித்து அதன்மூலம் உலகை வாழ்வித்தார்.

இப்படி இராமாயணம் இசைத்து உலகம் உய்விக்க சிறந்த பிள்ளைகள் தான் பெறவில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "வால்மீகரைப்போலே இரு மன்னர் பெற்றேனோ" என்கிறாள்.

36. இருமாலை ஈந்தேனோ தொண்டரடிப்பொடியார் போலே!

திருமண்டங்குடித் திருத்தலத்தில் அவதரித்த விப்பிர நாராயணர் திருவரங்கரத்துச் செல்வனாரிடம் பக்திகொண்டு திருத்தொண்டு செய்யக் கருதினார்.

முன்பு மாலாக்காரர் கொடுத்த பூ மாலையினால் கண்ணன் மகிழ்ந்ததையும், மலர்கொய்யச் சென்ற ஸ்ரீகஜேந்திரனுக்குப் பரமன் அருளியதையும் நினைந்து பெரியாழ்வார் போலே தாமும் நந்தவனம் அமைத்து புஷ்பக் கைங்கர்யம் செய்துவந்தார். பூமாலைகளால் அழகிய மணவாளனை அலங்கரித்துக் கண்டு மகிழ்ந்து வந்தார்.

இப்படிச் செய்துவரும் காலத்தில் இவர் தேவதேவி எனும் பெண்ணின் மாயவலையில் சிக்கி இடர்ப்பட நேரிட்டது. எம்பெருமான் இவரைத் தடுத்தாட்கொண்டு "போதரே என்று சொல்லி புந்தியுள் புகுந்துநின்று ஆதரம் பெருக வைத்தான்". தன்னைத் திருத்திப் பணிகொண்ட திருவரங்கத்துப் பெருமானின் கருணையை நினைந்து அவனுக்கே ஆட்படலானார். பூமாலைத் திருத்தொண்டோடு தன் அனுபவங்களை திருமாலை திருப்பள்ளி எழுச்சி எனும் பாமாலை மூலமாகவும் பரமனுக்குச் சமர்ப்பித்தார். தொண்டரடிப்பொடியாழ்வார் எனும் திருநாமமும் பெற்றார்.

பூமாலை பாமாலை சமர்ப்பித்த தொண்டரடிப் பொடியாழ்வாரை நினைந்து இவ்வாறான தொண்டிலே அடியேனுக்கு வாய்ப்பு இல்லையே என்று "தொண்டரடிப்பொடியாழ்வார் போலே இருமாலை ஈந்தேனோ" என்கிறார்.

37. அவனுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சியார் போலே!

ஸ்ரீபெரும்புதூரில் வாழ்ந்தவர் கஜேந்திரதாஸன் எனும் வைசியப் பெருமகனார். நாள்தோறும் காஞ்சிபுரம் சென்று பெருமாளை வழிபடும் நியமம் உடையவர்.

ஆதலால் திருக்கச்சி நம்பி எனவும் அழைக்கப்பெறுவார். வழிபாடு முடிந்ததும் பெருமாளுக்கு ஆலவட்ட கைங்கரியத்தைத் தொடர்ந்து செய்துவருவார். இவருக்குள்ள சிறப்பு, பெருமாள் இவரிடம் நேரில் பேசுவார். ஸ்ரீ ராமானுஜருக்கு எழுந்த ஆறு ஐயங்களுக்குப் பெருமானிடமிருந்து விளக்கங்களைத் திருக்கச்சி நம்பி மூலமே இராமானுஜர் பெற்றார்.

திருக்கச்சி நம்பியின் திருவடியே கதியெனக்கொண்டு வாழ்ந்துவந்தார் ஒரு வைணவர். பல்கால் திருக்கச்சி நம்பிக்குத் தொண்டுசெய்து வந்த அவர் திருக்கச்சி நம்பி பெருமானிடம் நேருக்கு நேர் பேசும் இயல்புடையவர் என்பதை அறிந்திருந்ததால் ஒருநாள் திருக்கச்சி நம்பியிடம் "சுவாமி தாங்கள் பெருமாளிடம் பேசுங்கால் அடியேனுக்கு மோட்சம் கிட்டுமோ எனக் கேட்டுச் சொல்லுங்கள்" என்றான்.

அன்பர் மீது கொண்ட பற்றுதலால் திருக்கச்சி நம்பியும் பெருமாளிடம் பேசும்போது தம் அன்பனுக்கு மோட்சம் கிட்டுமா என பெருமானிடம் விண்ணப்பித்தார்.

பெருமாள் "உன் அன்பன் அடியார்க்குத் தொண்டு புரிபவன். அதனால் கட்டாயம் அவனுக்கு மோட்சம் கிட்டும்" என்றார்.

பெருமாளிடம் விடைபெற்று வந்த திருக்கச்சியின் திருவடிகளில் வீழ்ந்து கேட்டார் ஸ்ரீ வைணவர். திருக்கச்சி நம்பிகள் சொன்னார் "நான் கேட்டேன். உனக்கு மோட்சம் உண்டு என்று பெருமாள் திருவாய் மலர்ந்தார். 'உனக்கு மோட்சம் உண்டா என்று கேட்டேனே தவிர எனக்கு உண்டா' என்று கேட்கவில்லையே" என்று ஆதங்கப்பட்டார்.

அதற்கு ஸ்ரீவைணவர் சொன்னார். "சுவாமி எதற்காக நீர் பெருமாளை சிரமப்படுத்த வேண்டும். உமக்கு நிச்சயமாக மோட்சம் கிடையாது. நீர் எந்த பாகவதருக்குக் கைங்கர்யம் செய்கிறீர், தினமும் பெருமாளிடம்தானே நிற்கிறீர் என்று"

அதன் பின்னரே திருக்கச்சிநம்பி பெரிய நம்பியிடம் தொண்டு பூண்டார்.

திருக்கச்சி நம்பிகள் போலே எம்பெருமானிடம் உரையாடும் வாய்ப்புப் பெறவில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "திருக்கச்சியார் போலே அவனுரைக்கப் பெற்றேனோ" என்கிறார்.

38. அவன்மேனி ஆனேனோ திருப்பாணரைப் போலே!

திருப்பாணாழ்வார் உறையூரில் தாழ்ந்த குலமெனக் கருதப்பட்ட பாணர் குலத்தில் அவதரித்தார்.

திருமால் அருளால் அவதரித்தவர். ஆதலால் இளமையிலேயே அவாவற்று எம்பெருமான் திருப்புகழை யாழ்மீட்டிப் பாடும் திருத்தொண்டு செய்து வரலானார். தாழ்ந்த ஜாதியில் பிறந்த நாம் திருவரங்கத்தைக் காலால் தீண்டலாகாது எனக் கருதி காவிரியின் தென் கரையிலிருந்து தினந்தோறும் பெரிய பெருமாளைப்பாடி மகிழ்வித்து வந்தார்.

ஒருநாள் திருவரங்கத்துப் பெருமாள் லோகசாரங்க முனிவரின் கனவில்தோன்றி "நம் அன்பரான பாண் பெருமாளை இழிந்த குலத்தவராகக் கருதாமல் நீரே சென்று தோள்களிலே ஏற்றிக்கொண்டு வாரும்" என்று கட்டளையிட்டான். அதன்படியே லோகசாரங்க முனிவரும் காவிரித்துறையில் கையில் யாழுடன் பாடிக்கொண்டிருந்த திருப்பாணாழ்வார் திருவடிபணிந்து "தங்களை ஸ்ரீரங்கம் எழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுவர வேண்டும் என்பது எம்பெருமான் கட்டளை" என்றார்.

திருப்பாணர் "திருவரங்கத்தை எப்படிக் காலால் மிதிப்பது" என்று தயங்க, லோகசாரங்க முனிவர் எம்பெருமான் நியமனத்தைச் சொல்லி அவரைத் தோளின்மேல் எழுந்தருளிவித்துக்கொண்டு நம்பெருமாள் திருமுன்ப இறக்கிவிட்டார். எம்பெருமானும் தன் திருமேனி வண்ணத்தை ஆழ்வாருக்குக் காட்டியருளினார்.

திருமுடி முதல் திருவடிவரை எம்பெருமானைக் குளிரக்கண்டு அனுபவித்த திருப்பாணாழ்வார் அமலனாதிப்பிரான் என்னும் திவ்வியப் பிரபந்தம் பாடியருளினார்.

"கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்
உண்ட வாயன் என்உள்ளம் கவர்ந்தானை
அண்டர் கோன்அணிய ரங்கன்என் அமுதினைக்
கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணவே"

என்று திருமேனி அழகில் ஈடுபட்டார். நம்பெருமாளும் அனைவரும் காண திருப்பாணாழ்வாரை தம் திருவடிகளில் சேர்த்துக்கொண்டார்.

இதனையே திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "அவன்மேனி ஆனேனோ திருப்பாணர்போலே" என்கிறாள்.

39. அனுப்பிவைய்யு மென்றெனோ வசிஷ்டரைப் போலே!

ஸ்ரீஇராமபிரான் அயோத்தி அரண்மனையிலிருக்கும்போது விசுவாமித்திர முனிவர் வந்து தசரதனிடம் யாகத்தைக் காப்பதற்காக இராமனை அனுப்பும்படி வேண்டினார். பிள்ளைப் பாசத்தால் தசரதர் மனம் வருந்தத் துவங்கினார். வருங்காலம் உணர்ந்தவர் ஆகையால் விசுவாமித்திரருடன் அனுப்பி வைப்பதன் மூலம் ஸ்ரீ இராமபிரானுக்கு அஸ்த்திர வித்தைகளும், திருமணமும் நடந்தேறும் என்பதறிந்து "தயங்காமல் அனுப்பி வையும் விசுவாமித்திரர் பின்னே" என்று கூறினார். தசரதன் அதன்படி அனுப்பிவைக்க இராம இலக்குவருக்கு அநேக நன்மைகள் நடந்தன.

இராமனுக்கு நன்மைகள் உண்டாகும் என்று விசுவாமித்திரரோடு அனுப்பச் சொன்னார் வசிட்டர். இவ்வாறு இறைவனுடைய நன்மையை நான் நினைத்தேனோ என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "வசிட்டரைப் போலே அனுப்பி வையும் என்றேனோ" என்கிறாள்.

40. அடிவாங்கினேனோ கொங்குப்பிராட்டியைப் போலே!

ஸ்ரீ ராமாநுஜர் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த காலம். கொங்குநாட்டைச் சேர்ந்த சுமதி என்னும் அம்மையார் திருவரங்கம் வந்து சேர்ந்தார்.

திருவரங்கத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் ஸ்ரீஇராமா நுஜருக்கு அன்னபிக்ஷை சிறப்பாக நடந்து கொண்டிருந்தது. இதனைக்கண்ட சுமதி "வீடு வீடாகப் பிச்சை ஏற்று வாழும் சந்நியாசியினால் என்ன கிடைக்குமென்று அரசன் முதலானோரெல்லாம் அவனுக்கு ஆட்படுகின்றனரே" என்று மனதில் சந்தேகம் கொண்டாள்.

ஒரு நாள் இராமாநுஜரிடமே இதனைக் கேட்டுவிட்டாள். இதற்கு இராமாநுஜர் கூறினார். "அம்மா அரசனாலும் இந்திராதி தேவர்களானுலும் எம்பெருமானின் பொருள் சேர்புகழைப் பேசத்துவங்கினால் அதன் தத்துவத்தை விளக்க முற்பட்டால் முடிவணங்கி அடங்கியே நிற்பர் ஆட்படுவர் மனக்கவலை தீர அதுவே மாமருந்து"

இதனைக்கேட்ட சுமதி, "சுவாமி, அப்படிப்பட்ட அரும்பொருளை அடியேனும் கற்று உய்வு பெற அருள்புரிய வேண்டும்" என்று திருவடிகளில் வீழ்ந்து வணங்கினாள்.

ஸ்ரீஇராமாநுஜர் அவ்வம்மையாரை மடத்திற்கு அழைத்துச் சென்று பஞ்சஸம்ஸ்காரபூர்வமாக மந்திர உபதேசம் செய்தார். "கொங்கர்கோன் குலசேகரன்"

என்றருளிச்செய்த நம்மையாளுடையார்களில் ஒருவருடை தேசத்தினின்றும் வந்து அவருடைய தொடர்பை நாம் நேரே பெறாதிருக்கினும் அவருடைய தேச சம்பத்தத்தை யாவது பெறச்செய்தமைக்கு மகிழ்ந்து கொங்குப் பிராட்டி என தாஸ்யநாமம் இட்டு அருளினார்.

அம்மையார் கொங்கு நாட்டிற்குச் செல்ல விரும்பி ஸ்ரீ ராமானுஜர் திருவடிகளில் வீழ்ந்து "சுவாமி அடியேன் விடைபெறுகிறேன். தேவரின் நினைவை என்றும் வணங்கித் துதிக்கும்படி ஏதேனும் ஒரு அடையாளம் தந்தருள வேண்டும் என்று விண்ணப்பித்தாள்.

ஸ்ரீ இராமானுஜர் தன்னுடைய திருவடிநிலையை கொடுத்தருளினார். அம்மையார் ஆசாரியன் திருமேனி அழகை வணங்கி அனுபவித்து தம் ஊர் சென்றார்.

ஆசாரியன் திருவடிகளே எல்லாமுமாவன என்ற எண்ணம் பெற்றாள் கொங்குப்பிராட்டி. திருக்கோளூர்ப் பெண்பிள்ளை இதனை எம்பெருமானாரிடம் "கொங்குப் பிராட்டியைப் போலே அடிவாங்கினேனோ" என்றாள்.

41. மண்பூவை இட்டேனோ குருவநம்பியைப் போலே!

குருவபுரம் எனும் ஊரில் ஒரு குயவர் தினமும் தனது மண் வேலையைத் துவக்குமுன் தான் மண்ணினால் செய்து வைத்திருந்த திருவேங்கடமுடையான் திருவடிகளில் மண்ணால் செய்த ஒரு பூவைச் சமர்ப்பித்து வேலையைத் துவக்குவார்.

பக்தியுடன் வேங்கடவன் திருமுன்பு சமர்ப்பிக்கப்படும் மண் பூவானது திருமலையிலுள்ள

திருவேங்கடமுடையான் திருவடிகளில் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது. தினமும் புதிது புதிதாக பூ திடீரென தோன்றுவதுகண்ட அர்ச்சகர்கள் இவ்வதிசயத்தைத் தொண்டைமான் சக்கரவர்த்தியிடம் தெரிவித்தார்கள். மன்னனும் நேரில்வந்து பார்த்து திகைத்து விளங்காமலிருந்தான். ஒருநாள் கனவில் திருவேங்கடமுடையான் தோன்றி "பக்தன் இடும் மண்பூவே தமக்கு உகந்த பரிமளப் பூவாகிறது" என்று கூறி தம் பக்தனின் தூய அன்பை வெளிப்படுத்தினான். மன்னனும் மற்றவர்களும் எம்பெருமான் கூறியபடியே வந்து குருவபுரத்தில் குருவநம்பியைக் கண்டு வணங்கி மகிழ்ந்தனர். இப்படிப் பக்தியினால் ஏதேனும் செய்யவில்லையே என்று "மண் பூவையிட்டேனோ குருவநம்பியைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

42. மூலம் என்றழைத்தேனோ கஜராஜனைப் போலே!

கஜேந்திரன் என்னும் யானை எம்பெருமானை அருச்சிக்கும் பொருட்டு மலர் கொய்வதற்காகத் தடாகத்தில் இறங்கியது. பக்திப்பெருக்கால் மலர் கொய்து கொண்டிருக்கும்போது முதலை ஒன்று அதன் காலை கௌவித் துன்புறுத்தியது. முதலையின் பிடியின்று தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமலும் மலர்த்தொண்டு தடைபடுவதை எண்ணி வருந்தியும் கஜேந்திரன் "ஆதிமூலமே" என்ற கூக்குரல் இட்டு அழைத்தது. குரல் கேட்டதும் மூலப் பரம்பொருளாகிய திருமால் விரைந்து ஓடிவந்து முதலையின் பிடியினின்று விடுவித்து "யானைக்கு அன்று அருளை ஈந்தார்."

கஜேந்திரன் தனது மலர்த்தொண்டு தடைபட்டபோது "மூலமே என்று கதறினானே நான் அவ்வாறில்லையே" என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை வருந்துகிறாள்.

43. பூசக்கொடுத்தேனோ கூனியைப் போலே!

கம்சனால் கண்ணனும் பலராமனும் வில்விழா காண வடமதுரைக்கு அழைக்கப்பட்டனர்.

வடமதுரை ராஜவீதியில் கண்ணனும் பலராமனும் செல்கையில் மங்கைப்பருவமுள்ள கூனி ஒருத்தி கையில் மணமுள்ள சந்தனக் கலசம் ஏந்தி செல்வதைக் கண்டனர். கண்ணன் அவளை விசாரித்தறிய அவள் சொன்னாள் "நான் கம்சனுக்குப் பூசும் சந்தனம் தயார்செய்பவள். அரண்மனை வேலைக்காரி."

கண்ணன் "அப்படியானால் எங்களுக்கும் பூசுவதற்கு மணமுள்ள சந்தனம் தருக" என்றார்.

கண்ணனின் திருமேனி அழகில் ஈடுபட்ட கூனி அன்போடு கண்ணனுக்குப் பூசுவதற்குச் சந்தனம் கொடுத்தாள். தனக்கு நேரும் தண்டனையும் மறந்து கண்ணனுக்குப் பூசிட்ட அவளின் கூனை, கண்ணன் திருவடி தீண்டுதலால் மாற்றிவிட்டான்.

இப்படி, தனக்குவரும் தீங்கை மறந்து தெய்வக் கைங்கர்யம் செய்யவில்லையே என்று பூசக் கொடுத்தேனோ கூனியைப்போலே என்கிறாள், திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

44. பூவைக்கொடுத்தேனோ மாலாகாரரைப்போலே!

தீயபுத்திக் கம்சனால் வஞ்சகமாக அழைக்கப் பட்டார்கள் கண்ணனும் பலராமனும். மதுராபுரியில் அவர்கள் இராஜவீதி வழியாக நடந்து வருகையில் மாலாகாரர் என்னும் பூமாலை தொடுப்பவரின் வீட்டிற்குச் சென்றார்கள். பூவைப் பூவண்ணனான கண்ணனுக்கு மலர்கள் மீது விருப்பம் அதிகம் எனத்தெரிந்திருந்த மாலாகாரர் அவர்கள் இருவருக்கும் வேண்டிய மலர் மாலைகளைத் தந்து மகிழ்வித்தான்.

கண்ணபிரானும் அவனுக்கு நல்வரம் பல ஈந்தருளினார். எம்பெருமான் விருப்பமறிந்து கொடுப்பது ஏற்றமுடையது. தான் அப்படிச் செய்யவில்லையே என்று பூவைக் கொடுத்தேனோ மாலாகாரரைப்போலே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

45. வைத்த இடத்திருந்தேனோ பரதனைப் போலே!

ஸ்ரீ இராமபிரான் சீதையுடனும் இலக்குவனுடனும் கானகம் சென்றதும் தசரதர் ஆவி வானகம் சென்றது. கோசல நாட்டிற்குச் சென்றிருந்த பரதன் அயோத்தி வந்து செய்தி அறிந்தான்.

அண்ணனை எப்படியாவது ஆரணியத்திலிருந்து அழைத்துவருவதாகக் கூறி கானகம் சென்றான் பரதன். ஆனால் இராமனோ அயோத்தி எழுந்தருள மறுத்தார். பரதன் விருப்பத்திற்கு இணங்க தனது பாதுகைகளைக்

கொடுத்து அனுப்பினார். "மரவடியைத் தம்பிக்கு வான்பணையம் வைத்து" என்பது பெரியாழ்வார் வாக்கு.

பரதனும் அப்பாதுகைகளைத் தன் முடிமீது தரித்து நந்திக்கிராமத்தில் பாதுகா பட்டாபிஷேகம் செய்தார். தவ வேடத்துடன் அங்கிருந்தே அயோத்தியைப் பேணினார்.

மெய்யடியார்கள் இறைவன் இட்ட வழக்காயிருப்பார்கள். அவன் உகந்த கைங்கர்யத்தைச் செய்து அடிமையாய் வாழ்வார்கள். அந்தப் பாங்கில் பரதனும் பாரதந்திரியம் காட்டினான். அப்படித் தானாகவில்லை என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை "வைத்த இடத்திருந்தேனோ பரதனைப்போலே" என்கிறாள்.

46. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே!

ஸ்ரீ இராமபிரான் தந்தைசொல் பேணுவதற்காகக் காட்டிற்குச் சென்றவேளையில் இலக்குவரும் உடனே பின்தொடர்ந்து சென்று அடியவரின் ஏவல் செய்தார்.

இறைவனுக்கு ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னிவழுவிலா அடிமை செய்வது பாகவதர் இயல்பு. இதற்குச் சான்றாகத் திகழ்கிறார் இளையபெருமாள்.

இதனை மனத்தில் எண்ணியே "வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

47. அக்கரைக்கே விட்டேனோ குகப்பெருமாளைப் போலே!

ஸ்ரீ இராமபிரான் சீதையுடனும் இலட்சுமணனுடனும் கங்கைக்கரையை வந்தடைந்தார். இராமபிரானின் வருகையைத் தெரிந்த சிருங்கிபேரபுரத்தின் தலைவனான குகன் என்பான் பக்திப்பெருக்கால் வரவேற்றான் வேடர் குலத்தில் பிறந்தவனானாலும் இராமபிரானைப் பார்க்க, தேனும் மீனும் கொண்டு வந்து உபசரித்தான்.

காட்டிலேயே இருந்து தன்னைப் பணிகொள்ள வேண்டுமென பிரார்த்தித்தான். கங்கைக்கரையில் புல்லால் அறை அமைத்து பெருமாளையும் பிராட்டியையும் தூங்க வைத்து இரவு முழுவதும் தான் தூங்காமலே, வில்லை ஊன்றிய கையோடும் வெய்துயிர்ப்போடும் காவல் காத்தான்.

பெருமாளும் இவனது பக்தியை மெச்சி "ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது மானமான் மடநோக்கி உன்தோழி, உம்பி எம்பி" என்றருள் செய்தார். "நின்னோடும் ஐவரானோம்" என்று அவனையும் தம்பியாக்கினார்.

மறுநாள் கங்கைக்கரையைக் கடப்பதற்காக குகன் தன் தோணியில் ஏற்றிக் கொண்டுபோய் விட்டான்.

குகப்பெருமாளின் சீரிய தொண்டினைத் தெரிந்த திருக்கோளூர்ப் பெண்பிள்ளை அப்படி ஏதேனும் கைங்கர்யம் செய்தேனோ! இல்லையே என்று "குகப்பெருமாளைப் போலே அக்கரைக்கே விட்டேனோ" என்கிறாள்.

48. அரக்கனுடன் பொருதேனோ பெரியஉடையாரைப் போலே!

கானகத்தில் இராம இலக்குவர் வாழ்ந்துவரும் காலத்தில் இராவணன் மாயமானைக் காட்டி சீதையிடமிருந்து இராம இலக்குவர்களைப் பிரித்தான். போலித்துறவி வேடம் பூண்டுவந்து சீதையைத் தூக்கிக்கொண்டு விண்வழி செல்கையில் சீதையின் அபயக்குரல் கேட்ட ஜடாயு என்னும் பெரிய உடையார் விரைந்து உயரப்பறந்து இராவணன் தேர் செல்ல வொட்டாமல் தடுத்தார். தன்னுடைய சிறகினாலும் நகத்தாலும் அலகினாலும் போர் செய்தார். ஜடாயுவின் திமிர் தாக்குதலுக்கு எதிர் நிற்க முடியாத இராவணன் சங்கரன் கொடுத்த வாளால் ஜடாயுவை வெட்டினான். ஜடாயு மூர்ச்சையாகி வீழ்ந்தார். பின்னர் சீதையைத் தேடிவந்த இராமபிரானிடம் இராவணன் தூக்கிச் சென்ற செய்தியைக் கூறி உயிர் நீத்தார். தனக்காகப் போர்செய்து உயிர்நீத்த ஜடாயுவுக்கு இராமபிரானே நீத்தார் கடன் செய்தார்.

இறைவன் பொருட்டாகத் தன்னைச் சிறிதும் கருதாது கடமை செய்யவில்லையே என்ற ஏக்கத்தால் "பெரியஉடையாரைப் போலே அரக்கனுடன் பொருதேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

49. இக்கரைக்கே சென்றேனோ விபீஷணரைப் போலே!

இராம இராவண யுத்தம் நடைபெறுமுன் இலங்கையில் இராவணன் ஆலோசனை சபையைக் கூட்டினான். விபீஷணன் தவிர மற்றவர்கள் எல்லாம் இராவணனின் தீய செயலுக்கு உடந்தையாகவே இருந்தனர். விபீஷணன் மட்டுமே இராவணனின் தீய செயலைக் கண்டித்தார். கோபம் கொண்ட இராவணன் தம்பியென்றும் பாராமல் தண்டிக்கமுற்பட்டான்.

தீய செயல் புரிந்துவரும் இராவணனின் தொடர்பே கூடாது என்று துணிந்து கடலுக்கு மறுகரையில் கூடியுள்ள இராமபிரானின் திருக்கூட்டம் நோக்கி "இராமா சரணம் சரணம்" எனக்கூவி சரணாகதி அடைந்தான் விபீஷணன்.

எம்பெருமானோடு கூடியிருக்கும் இயல்பை அருளாளர்கள் இக்கரை என்று குறிப்பிடுவார்கள்.

"அக்கரை என்னு மனத்தக் கடலுள்
அழுந்தி உன்பே ரருளால்
இக்கரை ஏறி இளைத்திருந் தேனை
அஞ்சேல் என்று கைக்கவியாய்"

என்பது பெரியாழ்வார் திருவாக்கு.

புறப்பற்றுக்களை நீக்கி எம்பெருமானைப் பற்றுவது சரணாகதனது செயல். இது செய்யவில்லையே என்று விபீஷணரைப் போலே இக்கரைக்கே சென்றேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

50. இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே!

எம்பெருமானிடம் பேரன்பு வாய்ந்தவர்கள் தாங்கள் மிக விரும்புவனவற்றை இறைவனுக்கு அர்ப்பணம் செய்வார்கள், இதை நடைமுறைப்படுத்திக் காட்டியவள் வேடர்குலத்துப் பிறந்த தவமுது மகளாகிய சபரி ஆவாள். ரிஷியமுக மலையில் உள்ள மதங்கமாமுனிவர் ஆசிரமத்தில் வசித்து வந்தவள் சபரி. தம் ஆசிரமம் வழியாக இராம இலக்குவர்கள் எழுந்தருளும் செய்தியை முன்பே தெரிந்துகொண்டு அவர்களை வரவேற்கத் தயாரானாள். காட்டிலுள்ள நல்ல கனிகளைப் பொறுக்கி எடுத்துச் சுவைத்துப் பார்த்து சிறந்தனவற்றை இராம இலக்குவர்களுக்காகச் சேர்த்து வைத்திருந்தாள். இருவரும் ஆசிரமத்திற்கு எழுந்தருளியபோது அக்கனிகளை அவர்களுக்குச் சமர்ப்பித்தாள்.

குகன் புனிதமாகக் கொண்டுவந்த தேனையும், மீனையும் சும்மா தொட்டு ஆசி வழங்கிய இராமபிரான் சபரியின் எச்சில் பழங்களை உவப்புடன் உண்டு மகிழ்ந்தான்.

எம்பெருமானுக்குத் தாம் விரும்புவனவற்றை வழங்கிய சபரியின் பண்பாடு தன்னிடமில்லையே என்று "சபரியைப் போலே இனியதென்று வைத்தேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

51. இங்கும் உண்டென்றேனோ பிரஹ்லாதனைப் போலே!

அரக்கர்கள் பட்டியலில் மிகவும் கொடியவன் இரணியன். முனிவரும் துறப்பரோ மகவின்மேல் காதல் என்பதற்கு மாறாக கொள்கை வெறியினால் தான் பெற்ற மகவினையே கொல்லத் துணிந்தான். இரணியன் மகனான பிரஹலாதன் கருவிலேயே நாரதரால் எட்டெழுத்து மந்திர உபதேசம் பெற்றவன். பிறந்தபோதிருந்தே நாராயணனை வழிபட்டு உய்ந்தவன்.

இரணியன் நாராயணனை மறக்குமாறு பல்வேறு உபாயங்களைக் கையாண்டு தன்மகனைத் திருத்த முயன்றான். அதுவும் பலிக்காது போகவே தன் மகனிடம் "நீ சொல்லும் நாரணன் எங்குள்ளான்" என்று அதட்டினான். அதற்கு பிரஹ்லாதன் "அவன் எங்கும் உளன்" என்றான்.

உடனே இரணியன் தனக்கு எதிரில் உள்ள தூணைக் காட்டி "இத்தூணில் உள்ளானோ" என்றான். "ஆம் இங்கும் உண்டு" என்றான் பிரஹ்லாதன். இரணியன் அத்தூணைக் கையால் புடைப்ப பிரஹ்லாதன் வார்த்தையைக் காப்பாற்ற இறைவன் நரசிம்மமாய்த் தோன்றி அருளினான். 'அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவன் எம்பெருமான்' இவ்வுணர்வில் பிரஹ்லாதன் திளைத்தான். இந்த வாய்ப்பு தனக்குக் கிடைக்கவில்லையே என்று "இங்கும் உண்டென்றேனோ பிரஹ்லாதனைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

52. இங்கில்லை என்றேனோ ததிபாண்டனைப் போலே!

ஆயர் குலத்தில் கண்ணபிரான் தீராத விளையாட்டுப்பிள்ளையாய் திருவிளையாடல் புரிந்த வேளை. எல்லோர் வீட்டிலும் உள்ள வெண்ணெய், தயிர் போன்றவற்றை அவர்கள் அறியாமல் கண்ணன் உண்டு அவர்களுக்கு அறிவுறுத்துவதற்காகத் தயிர்த்தாழிகளை உடைத்து உருட்டி விடுவான்.

ஒருநாள் கோகுலத்துப் பெண்கள் எல்லாம் தயிர்த்தாழி உடைத்த கண்ணனை விரட்டிப் பிடிக்க முற்பட்டனர். தன்னை அடிப்பதற்காகக் கோல்கொண்டு வரும் பெண்களிடம் அகப்படாதபடி ததிபாண்டன் என்பவனுடைய மனையில் புகுந்தான் கண்ணன். தன்னை உட்கார வைத்து ஒரு பெரிய பானையால் மறைத்து வைக்கும்படி ததிபாண்டனை வேண்டினான். ததிபாண்டனும் கண்ணன்மேல் பானை கவிழ்த்து ஒளித்துவைத்து அதன்மேல் உட்கார்ந்து கொண்டான்.

தேடிவந்த பெண்கள் ததிபாண்டனிடம் கண்ணன் எங்கே என்றனர். ததிபாண்டனோ "கண்ணன் இங்கில்லை" என்றான். பெண்கள் திரும்பிச் சென்றபோது கண்ணன் வெளியே வர முயற்சித்தான். ஆனால் ததிபாண்டனோ "எம்பெருமானே! நீ எனக்கும் என் தயிர்ப்பானைக்கும் மோட்சம் தருவதாயின் உன்னை வெளியே விடுகிறேன்" என்று கூறினான். அப்படியே கண்ணன் வாக்குறுதி கொடுத்து ததிபாண்டனுக்கும் தாழிக்கும் மோட்சம் கொடுத்தான்.

எம்பெருமான் மீது கொண்ட பரிவாலும் ஊற்றத்தாலும் பொய்மையும் வாய்மையிடத்த வாய், இங்கில்லை என்றான் ததிபாண்டன். அதனை நினைந்து கூறுகிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

53. காட்டுக்குப் போனேனோ பெருமானைப் போலே!

பிரமாதி தேவர்களின் இடுக்கண் களைய எம்பெருமான் அயோத்தி நகரில் தசரத குமாரராக அவதரித்தார்.

தசரதன் தன் திருமகனுக்கு முடிசூட்ட ஏற்பாடு செய்தபோது கூனியினால் கலக்கப்பட்ட கைகேயி, மன்னனை வரம் வேண்டி இராமனைக் கானகம் செல்லப் பணித்தாள். மலக்கிய மாமனத்தனான மன்னவனும் மறாதொழிய "குலக் குமரா காடுறையப் போ" என்று விடைகொடுத்தான். ஸ்ரீ இராமபிரானும் தந்தை சொற் பேணிக்காக்க மாலைமுடிநீத்து மலர்ப்பொன்னடி நோவ கானகம் புகுந்தார்.

அரக்கர்களின் கொடுமை அகற்றவும் தந்தை சொல்லைப் பேணிக்காக்கவும் ஸ்ரீ இராமபிரான் காட்டுக்குப் போனார். தன்னைச் சரணடைந்த தேவர்களின் துயரம் தீர்க்கக் காட்டிற்குச் சென்ற எம்பிரானைப் போலே அடியேன் ஏதேனும் செய்யவில்லையே என்று "பெருமானைப்போலே காட்டுக்குப் போனேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

54. கண்டுவந்தேன் என்றேனோ திருவடியைப் போலே!

சீதையைத் தேடுவதற்காகப் பல இடத்தும் வானர வீரர்கள் அனுப்பப்பட்டனர். தென்திசை சென்ற அனுமனிடம் இராமன் சீதையின் பல அடையாளங்களை உரைத்தான்.

அனுமனும் கடல் கடந்து இலங்கை சென்று அசோக வனத்தில் சீதையைக் கண்டு அடையாளம் உரைத்து மோதிரத்தையும் கொடுத்தான்.

சீதையும், 'அனுமன் அடையாளம் ஒக்கும்" என்று அதனை உச்சிமேல் வைத்து முகந்து தனது சூடாமணியை இராமனிடம் சேர்க்குமாறு அனுமனிடம் கொடுத்தாள்.

அனுமன் அதனைப் பெற்றுக்கொண்டு இலங்கையை எரியூட்டிவிட்டு இராமனிடம் வந்து "கண்டேன் சீதையை" என்றான்.

எம்பெருமானுக்குத் தொண்டு செய்வதில் ஈடுபட்டு அவனும் அவனடியார்களும் உகக்குமாறு அனுமானைப்போலே ஆகவில்லையே என்று திருக்கோளூர்ப் பெண்பிள்ளை கூறுகிறாள்.

55. இருகையும் விட்டேனோ திரௌபதியைப் போலே!

பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதியை துச்சாதனன் கூந்தலைப் பிடித்து இழுத்துவந்து துகில் களைய முற்பட்டான்.

துகில் களையும் இக்கட்டான நிலையில் தனது கணவன்மார்கள் தனக்குத் துணையாவார்கள் எனக் கருதினாள் திரெளபதி. ஆனால் துரியோதனனின் சபையில் ஐவரும் பொம்மைகளாயினர்.

சபைப் பெரியவர்களாவது தனது அவலநிலை போக்க உதவுவார்கள் எனக் கருதினாள். அவர்களும் நெட்டை மரமாயினர்.

தன் கையாவது தனக்கு உதவட்டும் என்று துகிலைப் பற்றிப் பார்த்தாள். ஆனால் துச்சாதனனின் முரட்டுத்தனத்திற்கு அவள் கையும் ஈடுகொடுக்க முடியவில்லை.

எல்லாம் கைவிட்ட பிறகுதான் இருகைகளையும் உயர்த்தி "கோவிந்தா" என்று இறைவனை அழைத்தாள். கோவிந்தனும் ஆடைகொடுத்து அவள் மானம் காத்தான்.

நம்மைக் காத்துக் கொள்வது நம் முயற்சியாலன்று. இறைவனுடைய திருவருளாலேதான் என்ற துணிவு திரெளபதிக்கு ஏற்பட்டது.

அப்படி "திரெளபதியைப்போலே இருகையும் விட்டேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

56. இங்கு பால்பொங்குமென்றேனோ வடுகநம்பியைப் போலே!

வடுகநம்பி. ஸ்ரீ ராமாநுஜரின் அணுக்கத் தொண்டர்களில் சிரியர். ஸ்ரீராமாநுஜரின் திருவடியே தனக்குக் கதியெனக் கொண்டவர். இவர் ஸ்ரீராமாநுஜருடன் பெருமாளை வழிபடச் சென்றாலும் ஸ்ரீராமாநுஜர் திருமேனியையே வழிபடுவார்.

ஒருநாள் ஸ்ரீராமானுஜர் திருமாளிகை வழியாக ஸ்ரீரங்கநாதன் திருவீதி உலா வந்தார். பெருமானின் திருமேனி அழகில் ஈடுபட்டு மெய்ம்மறந்திருந்த ஸ்ரீராமானுஜர் தாம் பெற்ற பேற்றை தம் சீடர் வடுகநம்பியும் பெறவேண்டும் என்று கருதினார். அப்போது வடுகநம்பி திருமடப் பள்ளியில் ஸ்ரீராமானுஜருக்காகப் பால் காய்ச்சிக் கொண்டிருந்தார். எனவே இராமானுஜர் "வடுகா பெருமாளை சேவிக்க வா" என்றார். அதற்கு வடுகநம்பி "சுவாமி உம்முடைய பெருமாளைச் சேவிக்க வந்தால் என்னுடைய பெருமாளுக்குக் காய்ச்சுகின்ற பால்பொங்கிப் போகும் ஆதலால் வர இயலவில்லை" என்றார்.

ஆசாரியனைத் தவிரத் தேவுமற்றறியாத வடுகநம்பியைப் போலவா அடியேன் என்று, "இங்கு பால் பொங்குமென்றேனோ வடுகநம்பியைப் போலே" என்கிறாள் ஸ்ரீராமானுஜரிடத்திலேயே திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

57. இருமிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப் போலே!

ஸ்ரீராமானுஜர் திருநாராயணபுரம் எழுந்தருளிய போது அங்கு பெருமான் திருமேனி காணாது வருந்தினார். எம்பெருமான் கனவில் தன் கல்யாணசரசின் தென்பாகமுள்ள செண்பகச் சோலையில் புற்றில் இருப்பதாகக் கூறியருளினார்.

ஸ்ரீ ராமாநுஜரும் திருப்புற்றில் கோவில் கொண்ட பெருமானைக் கண்டு மகிழ்ந்து மன்னன் உதவியுடன் திருவாராதனத்திற்கு ஏற்பாடு செய்தார்.

திருக்கோயிலில் திருவிழா நடத்த வேண்டும் என்று எண்ணியபோது அங்கு உத்ஸவமூர்த்தி இல்லையே என்று வருந்தினார், அன்று இரவு கனவில் எம்பெருமான் தோன்றி "நம்முடைய உத்ஸவமூர்த்தி தற்போது டில்லியில் நவாபின் அரண்மனையில் இருக்கிறார். அவரைத் திருநாராயணபுரம் எழுந்தருளுவித்து வாரும்" என்றருளிச் செய்தார். அதன்படி ஸ்ரீராமாநுஜரும் டில்லி நவாபின் அரண்மனைக்குச் சென்றார். மன்னனிடம் "எங்கள் தெய்வமான ராமப்ரியர் இங்கு எழுந்தருளியுள்ளார். அவரைத் தந்தருள வேண்டும்" என்றார். நவாபோ "உங்கள் பெருமான் இங்கிருப்பாராயின் அழைத்துச் செல்லுங்களேன்" என்றார். அப்பெருமான் அரண்மனையின் அந்தப்புரத்தில் இருப்பதை உணர்ந்த இராமாநுஜர் அங்கு சென்று கண்டு "தொடர்சங்கிலிகை" எனும் பாசுரம் பாடி அழைத்தார். ராமப்ரியரும் எளிமை தோன்ற செம்பொன் சலங்கை கலீர் கலீர் என்று ஒலிக்க அனைவரும் காணும் வண்ணம் நடந்தவந்து ஸ்ரீராமாநுஜர் மடித்தலத்திருந்தார். ஸ்ரீராமாநுஜரும் புளகாங்கிதம் அடைந்து "என்னுடைய செல்வப் பிள்ளையோ" என்று எடுத்தணைத்து முத்தமிட்டு உச்சிமோந்தருளினார். செல்வப்பிள்ளையும் அவருடைய பெருமை மிகுந்த கழுத்தின் இரு புறத்திலும் தமது இரண்டு கைகளால் சுற்றிவளைத்துப் பிடித்து அனைத்தார்.

செல்வப்பிள்ளை ஸ்ரீராமாநுஜரிடம் காட்டிய மகன்மை பேரன்பைப்போல தானும் காட்டவில்லையே என்று "இருமிடறு பிடித்தேனோ செல்லப் பிள்ளையைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ஸ்ரீராமாநுஜரிடமே.

58. நில்லென்று பெற்றேனோ இளையாற்றுக் குடிநம்பியைப் போலே!

இளையாற்றுக் குடிநம்பி திருவிழாதோறும் திருவரங்கம் வந்து ஸ்ரீரங்கநாதனை வழிபட்டு மகிழ்வார். தம்மூர் சென்று மீண்டும் திருவிழா வரும் வரையும் கண்ட கோலத்தையே உள்ளக்கிழியில் உரு எழுதி நினைந்து மகிழ்ந்துகொண்டிருப்பார்.

அவருக்கு நூறு வயது ஆன பொழுதில் உடம்பில் வலிமை குன்றியமையால் சுவாமியின் திருமுளைத் திருவிழாவிற்கு வந்து தரிசிக்க இயலவில்லை. எம்பெருமானும் திருவிழாக் கூட்டத்தில் தேடியருளிக் காணாமல் "நம் இளையாற்றுக் குடியான் வரவில்லை போலும்" என்று கூறினார்.

ஆறாந்திருநாளில் இளையாற்றுக் குடிநம்பி பெருமானை வழிபட்டார். தமது அன்பர் காலதாமதமாக வரக்கண்ட எம்பெருமான் நம்பியிடம் "நாம் உமக்கு என்ன செய்ய வேண்டும்" எனக் கேட்டார்.

நம்பி "சுவாமி தந்தருளிய உடம்பினால் கைங்கர்யம் பல செய்திருந்தேன். இப்போது போக்குவரத்துக்கு தகுதியில்லாதபடி மிகவும் இளைத்துவிட்டது" என்றார். அதற்கு எம்பெருமான் "வாராய் மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனே இரு" என்று அருளிச்செய்தார். எம்பெருமான் திருக்கோயிலுக்கு உள்ளே எழுந்தருளியபோது இளையாற்றுக்குடிநம்பி வைகுந்தவாழ்வு பெற்றார்.

இதனை எண்ணிய திருக்கோளூர்ப் பெண்பிள்ளை நம்பி இறைவன் கருணையைப் பெற்றார். அதுபோல தான் பெறவில்லையே என்று "இளையாற்றுக்குடி நம்பியைப் போல நில்லென்று பெற்றேனோ" என்கிறாள்.

59. நெடுந்தூரம் போனேனோ நாதமுனியைப் போலே!

ஸ்ரீ வைணவ ஆசாரியரான ஸ்ரீ நாதமுனிகள் யோகநிஷ்டர். ஒருநாள் நாதமுனிகள் யோகநிஷ்டையிலிருக்கும்போது வில்வல்லார்கள் இருவரும் ஒரு பெண்ணும் ஒரு குரங்கும் வந்து சென்றதாக நிஷ்டை கலைந்தவுடன் சீடர்கள் சொல்லக் கேட்டார். உடனே "ஐயோ வந்தவர்கள் ஸ்ரீ ராமபிரானும், சீதாபிராட்டியும், ஆஞ்சநேயருமல்லவா! அவர்களைத் தரிசிக்க இயலவில்லையே" என்று வருந்தினார். அவர்கள்போன திசைநோக்கி அவர்களைத்தேடிச் சென்றார். வழியில் குரங்கின் காலடி காணப்பெற்றது. பின்னும் செல்ல சிறிது தூரத்தில் பூ விழுந்து கிடந்தது. அப்படியே நெடுந்தூரம் சென்றும் அவர்களைக் காணாமையால் அங்கேயே மோகித்து விழுந்து திருநாட்டுக்கு எழுந்தருளினார்.

ஸ்ரீ நாதமுனிகள் போல தானும் பரம்பொருளைத் தேடி நெடுந்தூரம் போனேனோ என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

60. அவன்போனான் என்றேனோ மாருதியாண்டான் போலே !

ஸ்ரீ ராமாநுஜர் காலத்தில் சோழமண்டலத்தை ஆண்டுவந்த சோழராஜன் சிவனுக்கு மிஞ்சிய தேவதையில்லை என்று ஒரு ஓலையில் எழுதி அதில் வித்துவான்கள் எல்லோரையும் கையெழுத்திடச் சொன்னான். எல்லோரும் அரசன் ஆணைக்குப் பயந்து அவ்வாறே கையெழுத்திட்டார்கள்.

ஸ்ரீராமாநுஜரையும், கூரத்தாழ்வாரையும் இக்கருத்துடன் தனது சபைக்கு அழைத்தான் மன்னன். தனது ஆசாரியரான ஸ்ரீ ராமாநுஜருக்குத் தீங்கு வரக்கூடாதெனக் கருதிய கூரத்தாழ்வான் ஸ்ரீ ராமாநுஜர் போல வேடம் பூண்டு அரசசபை சென்றார். பல அல்லல்களும் பட்டார்.

ஸ்ரீ ராமாநுஜர் தீயவனின் தீச்செயலுக்கு அஞ்சி திருநாராயணபுரத்திற்கு எழுந்தருளி அங்கிருந்தே ஸ்ரீ வைணவம் பேணி வந்தார்.

இச்சோழ மன்னன் பலவருஷங்கள் கழித்து இறந்த பின்னர் ஒரு நாள் மன்னன் இறந்த விஷயத்தை இராமாநுஜரிடம் விண்ணப்பம் செய்ய மாருதியாண்டான் என்பவன் திருநாராயணபுரம் சென்றான்.

திருநாராயணபுரத்தில் ஸ்ரீராமாநுஜர் ஒரு குளக்கரையில் நின்று கொண்டிருக்கும்போது மாருதியாண்டான் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி "அவன் போனான்" என்று விண்ணப்பம் கொடுத்தான். இச்செய்தியைக் கேட்ட ஸ்ரீராமாநுஜர் மகிழ்ந்து அவரைவாரி எடுத்து மகிழ்வினால் "கல்யாண்" என்றருளிச் செய்தார் அன்று முதல் அக்குளம் "கல்யாணிசரஸ்" எனப் படலாயிற்று.

ஸ்ரீ ரங்கநாதனை என்று வழிபடப் பெறுவோம் என நினைந்து உருகிய ஸ்ரீ ராமாநுஜருக்கு இச்செய்தி இனிதான செய்தியாயிற்று. இதுபோல தான் ஆசாரியனுக்கு இனியவார்த்தைகள் சொன்னேனோ என்று "அவன் போனான் என்றேனோ மாருதியாண்டான் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

61. அவன்வேண்டா என்றேனோ ஆழ்வானைப் போலே!

இராமாநுஜர் மேல்நாட்டிற்குச் சென்றபின் கூரத்தாழ்வான் ஒருநாள் ஸ்ரீ ரங்கநாதனை வழிபடச் சென்றார் திருக்கோயிலுக்குள் செல்கையில் சோழ அரசரின் சேவகர்கள் கூரத்தாழ்வானைத் தடுத்து "நீர் இராமாநுஜரின் சீடராயின் ஆலயத்தினுள் செல்ல அனுமதிக்க மாட்டோம், ஸ்ரீராமாநுஜர் உறவைத் துறந்தால் ஸ்ரீரங்கநாதனைச் சேவிக்கலாம்" என்றனர். இவ்வார்த்தையைக் கேட்ட கூரத்தாழ்வான் இருசெவிகளையும் பொத்திக்கொண்டு "என் ஆசாரியன் உறவை உதறிவிட்டுப் பெருமாளைச் சேவிக்கவும் வேணுமா! அப்படிப்பட்ட பெருமாளான அவன் வேண்டா" என்று கூறிப்போய் விட்டார்.

ஆசாரியன் திருநாமம் மதிக்காத இடத்தில் பெருமாளை வழிபடும் விருப்பமில்லை என்று துறந்தார் கூரத்தாழ்வான். அப்படி அடியேன் ஆச்சாரிய பக்தி உடையவள் அல்லவே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானரைப் போலே !

யக்ஞமூர்த்தி எனும் அந்தணர் காசி நகரில் சிறந்த வேதவல்லாராகத்திகழ்ந்தார். ஸ்ரீ ராமாநுஜரின் புகழைக் கேள்விப்பட்ட யக்ஞமூர்த்தி அழுக்காறு கொண்ட மனத்தராய் இராமாநுஜரை வாதில் வெல்ல வேண்டுமெனக் கருதி திருவரங்கம் வந்தார். ஸ்ரீராமாநுஜரை வாதுக்கழைத்தார். வாதில் தோற்றவர் மற்றவருக்கு அடிமையாக வேண்டும் என்னும் நிபந்தனை. வாதம் 18 நாட்கள் நடைபெறலாயிற்று வித்யாகர்வம் கொண்ட யக்ஞமூர்த்தி தமது சாமார்த்தியத்தினால் ஸ்ரீ ராமாநுஜரை வெற்றிகொள்ள முயன்று கொண்டிருந்தார். ஸ்ரீராமாநுஜர் மனம் வருந்தி . ரங்கநாதனிடம் மனம் உருகிப் பிரார்த்தித்தார். "ஆழ்வார் தொடங்கி ஸ்ரீஆளவந்தார் காலம் வரை சீராகவளர்ந்து வந்த ஸ்ரீ வைணவ தரிசனம் தன் காலத்தில் தோற்கக்கூடாதே" என விண்ணப்பித்து அமுது அருந்தாமல் இருந்தார். கனவில் எம்பெருமான் தோன்றி மறுநாள் வாதுக்குச் சென்று யக்ஞமூர்த்தியை வென்று வருமாறு பணித்தார்.

ஸ்ரீராமாநுஜரும் மாயாவாதக் கருத்துக்களை வென்று யக்ஞமூர்த்தியை வாதில் வெற்றி கொண்டார். யக்ஞமூர்த்தி தோல்வியை ஒப்புக் கொண்டு ஸ்ரீராமாநுஜர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். ஸ்ரீராமாநுஜர் ஸ்ரீரங்கநாதனாலே தனக்குக் கிடைக்கப்பெற்ற சீடரான யக்ஞமூர்த்திக்கு "அருளாளப்பெருமாள் எம்பெருமானார்" எனும் தாஸ்ய நாமம் கொடுத்து ஆட்கொண்டார்.

எம்பெருமான் பெருமையை அவன் துணை கொண்டே வென்ற வாய்ப்பு தன்போல்வாருக்கு இல்லையே என்று எம்பெருமானாரிடமே கூறுகிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

63. அருளாழம் கண்டேனோ நல்லானைப் போலே !

ஸ்ரீ வைணவ அந்தணர் ஒருவர் தினமும் நீராட நதிக்குப் போவது வழக்கம். ஒருநாள் கரையில் ஒரு பிரேதத்தைக் கண்டார். அப்பிரேதம் பஞ்சசம்ஸ்காரம் பெற்றதாயிருந்தது. அதைக்கண்ட அந்தணர் "ஐயோ! இது அநாதைப் பிரேதமாயிருந்தாலும் உடலில் எம்பெருமான் திருவிலச்சினை இருக்கிறதே. இதை நாம் அவமரியாதை செய்யக்கூடாது" என்று கருதினார் எந்தக்குலம் எனத் தெரியாத அப்பிரேதத்தை எடுத்துக்கொண்டு போய் தகனம் செய்தார். இதனை அறிந்த அவ்வூர் அந்தணர்கள் அது தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்தவனுடைய பிணம் என்பதைத் தெரிந்து தகனம் செய்த அந்தணரை ஜாதியினின்றும் நீக்கி ஜாதிக்கட்டுப்பாடு செய்தார்கள்.

பஞ்சசம்ஸ்காரம் பெற்றதேகத்தை ஒரு பொருளாகக் கருதி மதித்த அந்தணரின் அருளின் ஆழம்கண்ட எம்பெருமான் ஆவேசமாக "நீர் நாட்டுக்குப் பொல்லான், நமக்கு நல்லான் ஆகையால் இன்றுமுதல் உமக்கு நல்லான் சக்கரவர்த்தி என்று நாமம் சூட்டுகிறேன்" என்றார். அன்று முதல் அவருக்கும் அவர் பரம்பரைக்கும் நல்லான் சக்கரவர்த்தி என்று பெயர் வழங்கலாயிற்று.

நல்லானைப்போலே அருளாழம் காணப் பெற்றிலனே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே !

திருவரங்கம் பெரிய கோயிலில் திருவத்யயனத் திருநாள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஒருநாள் திருவரங்கப் பெருமாள் அரையர்.

"கெடும் இடராய எல்லாம் கேசவா வென்ன நாளும்
கொடுவினை செய்யும் கூற்றின் தமர்களும் குறுககில்லார்
விடமுடை அரவில் பள்ளி விரும்பினான் சுரும்பலற்றும்
தடமுடை வயலனந்த புரநகர்ப் புகுது மின்றே"

என்னும் திருவாய்மொழியை அபிநயத்துப் பாடிக்கொண்டிருந்தார். ஸ்ரீ ஆளவந்தார் இதனைப் பார்த்துக் கொண்டிருந்தார். அபிநயக்காரரோ அந்தப் பாசுரத்தில் 'நடமினோ நமர்களுள்ளீர்! நாமுமக்கு அறியச் சொன்னோம்' என்னும் பகுதியைப் பலதடவை ஸ்ரீஆளவந் தாரை நோக்கிச் சொன்னார்.

இதனைக்கேட்ட ஆளவந்தார் அப்போதே ஸ்ரீரங்க நாதனையும், அரையரையும் வீழ்ந்து வணங்கித் தனது திருமடத்திற்குக் காவலாக தெய்வவாரியாண்டானை நியமித்து வைத்து திருவனந்தபுரம் எழுந்தருளினார். அங்குசென்று அனந்தபுரத்தம்மானைத் திருவடித் தொழுது திருவரங்கம் வந்தார்.

அப்படித் தன் வாழ்வு அமையவில்லையே என்று "அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வவாரியாண்டனைப் போலே !

தெய்வவாரியாண்டான் ஸ்ரீ ஆளவந்தாரின் சீடர், ஸ்ரீ ஆளவந்தார் திருவனந்தபுரம் எழுந்தருளியபோது இவரைத் தம் திருமடத்துக்குக் காவலாய் விட்டுச் சென்றார். தம் ஆசாரியரின் பிரிவைத் தாங்க இயலாத தெய்வவாரியாண்டான் சில நாளில் உடம்பு இளைத்து நோயுற்றார். வைத்தியர்கள் வந்து கேட்டபோது தனக்கு ஆசாரியரின் பிரிவைத் தவிர வேறு நோயில்லை என்றார். அன்பர்கள் அனைவரும் வாரியாண்டானைப் பல்லக்கில் வைத்து எடுத்துக்கொண்டு திருவனந்தபுரம் நோக்கிச் சென்றனர். திருவனந்தபுரத்திலிருந்து மீண்டு கரைமனை ஆற்றில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆளவந்தார் தெய்வவாரியாண்டானைக் கண்டதும் திடுக்கிட்டார். ஆண்டானும் ஆளவந்தார் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். வந்த காரணத்தை மற்றவர்கள் மூலம் அறிந்த ஆளவந்தார் தெய்வவாரியாண்டானைப் பார்த்து அருளினார் "ஸ்ரீராமர் வீரராக இருந்தமையால் ஸ்ரீபரதாழ்வான் அவர் வைத்த இடத்தே இருந்தார். நாம் அப்படியல்லாமையால் நாம் வைத்த இடத்தில் இராமல் இருந்துவீட்டீர்" இதைக்கேட்ட தெய்வவாரியாண்டானும் "ஸ்வரூபஹானிபட்டேனே" என்று வீழ்ந்து கிடந்தார்.

இவர் எழுந்திராமை கண்ட ஆளவந்தார் "என்னை வீரராக ஆக்கினால் ஒழிய எழுந்திரேன் என்று கிடக்கின்றீரோ" என, இவரும் 'இதுவும் ஒரு ஸ்வரூபஹானியாயிற்றே' என்று பரபரப்பாய் எழுந்து நின்றார். அப்போது அங்குள்ள மற்ற சீடர்கள் தெய்வவாரியாண்டானின் ஆசாரிய பிரிவாற்றாமை

கண்டு இரங்கி மனம் நெகிழ ஆளவந்தார் "ஆண்டானே மிகவும் மெலிந்தீர்" என்று முதுகை தடவிக்கொடுத்து திருவனந்தபுரம் திருக்கோயிலைக் காட்டி "அனந்தபுரத்துப் பெருமானை சேவித்து வாரும்" என்றார். ஆண்டனோ "அடியேனுடைய அனந்தபுரம் எதிரே வந்திருக்க அங்கே போவானேன்" என்றார். தெய்வவாரிடாண்டானின் ஆசாரிய பக்திகண்டு உகந்தருளிய ஸ்ரீ ஆளவந்தார் அவரைக் கூட்டிக்கொண்டு திருவரங்கம் எழுந்தருளினார்.

ஆசாரியனை விட்டுப் பிரிந்ததனால் தெய்வ வாரியாண்டானுக்கு உடம்பு இளைத்தது. இதனைக் கருதியே "ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வ வாரியாண்டானைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே !

திருவரங்கம் பெரிய கோயிலில் சந்நிதி புரோகிதராகத் திகழ்ந்தவர் அமுதனார். சகல சாஸ்திரங்களையும் கற்றறிந்த இவர் திருவரங்கனுக்கு குடிகுடி ஆட்செய்யும் இயல்பினர். கூரத்தாழ்வரால் ஞானச்சுடர் கொளுத்தப்பெற்ற அமுதனார் ஸ்ரீராமாநுஜரின் திருவடியைப் பணிந்தபோது எம்பெருமானார் கூரத்தாழ்வான் திருவடிகளிலே படுகாடு கிடக்கப் பணித்தார்.

ஆச்சாரிய பக்தி தோன்ற பிரபந்தம் செய்ய வேண்டுமென்று விரும்பிய அமுதனார் ஸ்ரீராமாநுஜர் திருவடிகளில் விண்ணப்பிக்க எம்பெருமானாரும் "உமக்குப் பிரபந்தம் செய்யவேணுமென்கிற விருப்பம்

உண்டாகில் உமக்கு லட்சியமான ஆழ்வானும் நமக்கு லட்சியமான ஆழ்வார்களும் அவர்கள் உகந்தருளின நிலங்களும் விளங்குமாறு ஒரு பிரபந்தம் செய்யும்'' என்று ஆணையிட்டார்.

அமுதனாரும் அவ்வாணையை, சிரமேற்கொண்டு எம்பெருமானார் திருவடிகளில் விருப்பமுடையவர்களுக்கு, காயத்ரிபோல தினசரி பாராயணம் செய்யும் பாங்கில் பாடல் தோறும் இராமாநுஜன் என்னும் திருநாமம் இட்டு நூற்றெட்டு பாடல்கள் அருளிச் செய்தார். ஸ்ரீஇராமாநுஜர் மற்ற அருளாளர்களுடன் இப்பிரபந்தத்தை திருச்செவி ஏற்று மகிழ்ந்து தன்னுடைய அடியவர்கள் எல்லாம் தினசரி ஓதும்படி நியமித்தார். அமுதனாருக்கு 'திருவரங்கத் தமுதனார்' எனும் திருநாமமும், இப்பிரபந்தத்திற்கு 'பிரபந்த காயத்ரி' என்னும் திருநாமமும் வழங்கலாயின. இந்தப் பாசுரத்தில் ஏழாம் பாசுரத்தில் தம் ஆசாரியரான கூரத்தாழ்வாரைக் குறிப்பிட்டு உள்ளார்.

ஆசாரிய பக்தி தோன்ற அவருடைய குணநலங் களைப்பாடிப் புகழவில்லையே என்று "அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே'' என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

67. அநுகூலம் சொன்னேனோ மாலியவானைப் போலே !

மாலியவான் இராவணனுக்குப் பாட்டன். இராவணன் போர்க்களத்து, தோற்று வருந்தியிருக்கும் காலையில், மூப்பின்யாக்கை வாங்கிய வரிவில்அன்ன மாலியவான் என்று ஓதும் பூங்கழல் அரக்கன் வந்து இலங்கை வேந்தனுக்கு அறிவுரை புகன்றான் "முக்கோடி

வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் உடைய நீ தேவர், யக்ஷர், கந்தர்வர்களால் மரணம் வராதிருக்க வரம் பெற்றனை, மனிதரால் மரணம் வராதிருக்க வரம் பெறவில்லை. மனித வடிவுடன் அறம் தலைநிறுத்த ஆண்டவனே இராமனாகத் திருமேனி தாங்கியுள்ளான். எனவே மரணமடைவது உறுதி. மரணமடையுமுன் இராமனிடம் சரணமடைய வேண்டும்'' என அறிவுரை பகன்றான்.

கொடிய மனமுடையோரைத் திருத்த மாலியவன் போலதான் ஏதேனும் சொல்லவில்லையே என்று "அநுகூலம் சொன்னேனோ மாலியவானைப் போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

68. கள்வனிவன் என்றேனோ லோககுருவைப் போலே !

மாவலி சக்ரவர்த்தி எல்லாப் பொருளும் தன்னுடைய தென்ற உணர்வால் வந்து கேட்டவர்க்கெல்லாம் எல்லாம் வழங்குவதாக விளம்பரம் செய்தான். சத்து, சித்து பொருள்களை நிர்வாகம் செய்யும் ஈஸ்வர தத்துவம் உணராத இவனைத் திருத்திப் பணிகொள்வதற்காக இந்திராதி தேவர்கள் வேண்டு கோளுக்கிணங்க திருமால் வாமனனாக திருமேனி தாங்கினார். மாவலிபால் சென்று மூவடி மண் கேட்டார். வந்தவர்க்கெல்லாம் வழங்கிக் கொண்டிருந்த மாவலிதருகிறேன் என்றார். ஆனால் உடனிருந்த குருவாகிய சுக்கிராச்சாரியரோ வந்தவனை இனம் கண்டுகொண்டார். அண்டர்நாயகனே கையேந்தி நிற்பதைக்கண்டு சுக்கிராச்சாரியார் இது "மாயம்

எனக்கருதி "தானம் செய்யக் கூடாது வந்திருப்பவன் மாயன், கள்வன்" என்றார். குருவின் வார்த்தையை மீறி தானம் செய்ய முற்பட்ட மாவலியைத் தடுக்கவும் செய்தார். தானம் தடுத்த செயல் எம்பெருமான் சுக்கிரன் கண்ணைப் பறித்தார்.

"மிக்கபெரும் புகழ் யாவலி வேள்வியில்
தக்கது இது அன்று தக்கது இது அன்று தானம் விலக்கிய
சுக்கிரன் கண்ணைத் துரும்பாற் கிளறிய
சக்கரக் கையனே."

என்பது பெரியாழ்வார் வாக்கு.

இறைவன் அடியார் உள்ளம் கவர்கள்வன். வேதமும் அவனைத் திருடன் என்றே புகழும் திருமேனி அழகாலும் குணங்களாலும் அடியார் உள்ளம் கவரும் இறைவனைக் கள்ளன் என்ற சொல்லாலே குறிப்பிட்டவர் சுக்கிராச்சாரியார். அந்த வாய்ப்பு தனக்குக் கிடைக்கவில்லையே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

69. கடலோசை என்றேனோ பெரியநம்பியைப் போலே !

ஸ்ரீ மாறனேர்நம்பி என்பவர் தாழ்ந்த குலத்துதித்தவர். ஸ்ரீஆளவந்தார் சீடர்களுள் ஏற்றமுடையவர். ஒருநாள் ஆளவந்தார் பராந்தகம் எனும் ஊர் வழியாக பாதயாத்திரை வரும்போது மாறனேர்நம்பி பசி மேலீட்டால் சேற்றுநீரை கைப்பிடி எடுத்து உண்பது கண்டு ஆச்சரியப்பட்டார். "பசிதீர்க்க உணவும் நீரும் பகவான் படைத்திருக்க சேற்றைப் புசிப்பானேன்" என்று கேட்டபோது இவர் சொன்னார் "மண்சுவருக்கு மண்ணை இடுகிறேன்" இதைக்கேட்ட ஸ்ரீஆளவந்தார்

"பிறந்தபோதே சடவாயுவை முனிந்த மாறனாகிய சடகோபரோ இவர்" என்றழைத்தார். அன்றுமுதல் மாறனேர்நம்பி எனப்பட்டார்.

ஸ்ரீ ஆளவந்தார் ஒருநாள் எம்பெருமான் திருமுன்பு மனம் உருகி வழிபட்டுக் கொண்டிருக்கும்போது எம்பெருமான் அர்ச்சகமுகமாக "நாம் உமக்கு வைகுந்த வாழ்வுதந்தோம்" என்றார். ஸ்ரீஆளவந்தார் "சுவாமி பிராகித கருமம் இன்னும் கொஞ்சம் அநுபவிக்க வேண்டி உளதே" என்றார். அதற்கு எம்பெருமான் "அதனை உம்முடைய சீடர்களில் யாருக்காவது கொடுத்திவிடும்" என்றார்.

ஸ்ரீஆளவந்தார் தன்மடம் வந்து சீடர்களிடம் "நம்பெருமான் நியமனப்படி நமது பிராகிருதகர்மத்தை உங்களில் யார் பெறத்தயாராக உள்ளீர்கள்" என்று கேட்டார். எல்லாச் சீடர்களும் பேசாமலிருந்தார்கள். ஆனால் மாறனேர்நம்பியோ "சுவாமி அந்தப் பிரசாதத்தை அடியேனுக்கு அனுக்கிரகிக்க வேண்டும்" என்றார். "அதனுடைய உபத்திரவம் தாங்க முடியாதே" என்று ஸ்ரீஆளவந்தார் தயங்க "அதுவே எனக்கு மகாப் பிரசாதம்" என்றார் நம்பி.

ஸ்ரீஆளவந்தார் தனது வினையை நம்பியிடம் அனுபவிக்கவிட்டார். அதனால் நம்பியின் திருமேனியில் வருத்தம் உண்டாயிற்று. தமக்குத் தளிகை செய்து கொள்ள முடியாத நிலையில் நம்பி வருந்தியபோது அந்தணரான பெரியநம்பி அவருக்கு அமுதருத்தி வந்தார். இவ்வாறு ஏற்றம் உடையவர் ஸ்ரீமாறனேர் நம்பி.

ஸ்ரீமாறனேர் நம்பி தன்னுடைய ஆச்சாரியரான ஆளவந்தாரை நினைத்துக்கொண்டிருக்கையில் பிரம்ப கபாலம் வெடித்து ஆசாரியன் திருவடி அடைந்தார். இவருக்குச் செய்ய வேண்டிய பத்துநாள் கடன்களை பெரியநம்பிகள் செய்தார். ஸ்ரீரங்கத்து ஸ்ரீவைணவர் அனைவரும் தாழ்ந்த குலத்தவருக்குப் பெரியநம்பி சரம கைங்கர்யம் செய்ததைக் கண்டு ஜாதியினின்றும் விலக்கி வைத்தனர்.

இச்செய்தியறிந்த ஸ்ரீராமாநுஜர் தன் குருவான பெரிய நம்பிகளைத் திருவடி பணிந்து "சுவாமி மாறனேர் நம்பிக்கு சரம கைங்கர்யம் செய்வதற்கு என்னைப் போன்றவர்களைப் பணிகொள்ளாமல் தேவரீரே செய்தது மற்றவர் மனதை புண்படுத்துகிறதே" என்றார். இதற்கு பெரியநம்பி "மாறனேர்நம்பியை என்ன நினைத்தீர் மனத்தால் நாம் அந்திதொழுகைக்கு ஆளிட்டாலும் இடுவோம். இந்தக் காரியத்தில் மாத்திரம் ஒருவரை இடமாட்டோம். 'நான், பெருமாளைக் காட்டிலும் தருமரைக் காட்டிலும் பெரியவனல்லவே மாறனேர்நம்பி. ஜடாயுவையும் விதுரரையும் காட்டிலும் சிறியவரல்லவே. தசரத குமாரன் ஜடாயுவுக்கும் தருமபுத்திரர் விதுரருக்கும் சரம கைங்கர்யம் செய்தது அவர்களுடைய நிலையை அறிந்தல்லவா? ஸ்ரீ நம்மாழ்வார் அருளிச்செய்த அடியார் மகிமை பற்றிப் பேசும். பயிலும் சுடரொளி 'நெடுமாற் கடிமை' போன்ற அருளிச்செயல்கள் கடலோசையோ" என்று கேட்டார். ஸ்ரீ ராமாநுஜரும் சம்மதித்து பெரியநம்பியின் திருவுள்ளக் குறிப்பைக்கண்டு மகிழ்ந்து மற்றவருடைய மதிமயக்கத்தை நீக்கியருளினார்.

"அடியார்க்குச் செய்யவேண்டிய அன்பு பற்றிக் கற்றுணர்ந்து கற்றது பயன்படாமற் போயின் கடலோசை போன்றதாம்" என்றார் பெரியநம்பிகள். அந்த உணர்வு தான் பெறவில்லையே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

70. சுற்றிக் கிடந்தேனோ திருமாலையாண்டான் போலே !

ஸ்ரீராமானுஜர் திருவரங்கப் பெருமானைச் சேவித்து விட்டு, திருமாலையாண்டானுடன் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் எழுந்தருளினார். அப்போது நம்பிகள் ஸ்ரீராமானுஜரிடம் "நீர் திருமாலையாண்டானிடம் திருவாய் மொழிக்கு அர்த்தம் கேளும்" என்று உரைத்தார். திருமாலையாண்டான் ஸ்ரீஆளவந்தாரிடம் அர்த்தம் கேட்டவர் என்ற காரணத்தினால்.

திருவாய்மொழி வியாக்யானம் திருமாலை யாண்டான் அருளும்போது ஸ்ரீராமானுஜர் சில புதிய கருத்துக்களைத் தெரிவிப்பார். ஆனால் திருமாலை யாண்டானோ தான் இதனை ஆளவந்தாரிடம் கேட்கவில்லையே என்று மறுதலிப்பார். இதனால் வியாக்யானம் சிலவேளை தடைப்பட்டது. ஸ்ரீராமானுஜர் சொன்ன வியாக்யான உரையின் விளக்கங்களை கேட்டக் திருக்கோட்டியூர் நம்பிகள் "நான் ஸ்ரீ ஆளவந்தார் சொல்ல இதனை முன்பு கேட்டுள்ளோம். மேலும் ஆளவந்தார் திருவுள்ளக் குறிப்பு தவிர வேறெதுவும் ஸ்ரீராமானுஜர் அறியார்" என்றார்.

திருமாலையாண்டான் ஒருதடவை திருவாய்மொழி வியாக்யானம் அருளிச் செய்யும்போது ஸ்ரீராமானுஜர்

"ஸ்ரீஆளவந்தார் இப்படி அருளிச்செய்யார்" என்று விண்ணப்பித்தார். அதற்கு ஆண்டான் நீர் ஆளவந்தாரைக் கண்டதில்லையே இப்படிச் சொல்வார் என்பதற்கு சான்று ஏது" என்றார். ஸ்ரீராமானுஜர் "அடியேனுக்கும் ஆளவந்தானுக்கும் ஏகலைவன் துரோணாசார்யர் போன்ற உறவு உண்டு" என்றார். அப்போதுதான் ஆண்டானுக்கு ஸ்ரீராமானுஜர் ஒரு திருவவதாரம் என்று புரிந்தது. அன்றுமுதல் ஸ்ரீராமானுஜர் திருவாய்மொழிக்கு வியாக்யானம் அருள திருமாலை யாண்டான் அவரையே சுற்றிக்கொண்டு படுகாடு கிடந்ததுமன்றி தனது குமாரரையும் ஸ்ரீராமானுஜர் சீடராக்கினார்.

அப்படித்தான் "திருமாலையாண்டான்போலே சுற்றிக்கிடந்தனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

71. சூளுறவு கொண்டேனோ திருக்கோட்டியூரார் போலே !

ஸ்ரீராமானுஜர் பெரியநம்பிகளின் பரிந்துரையினால் திருக்கோட்டியூர் நம்பிகள் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி தனக்கு ரஹஸ்யார்த்தங்களை அறிவிக்க வேண்டும் எனப்பிரார்த்தித்தார். ஆனால் நம்பிகளோ வாளாவிருந்துவிட்டார் முதலில்.

ஒரு தடவை திருவரங்கப் பெருமானே, நம்பிகளிடம் ஸ்ரீராமானுஜருக்கு உபதேசிக்குமாறு அர்ச்சகமுகமாக நியமித்தருளினார். அதன்பிறகே ஸ்ரீராமானுஜரை திருக்கோட்டியூருக்கு அழைத்துச் சென்றார். நம்பிகள் 18 முறை இராமாநுஜரை நடப்பித்தருளி ஒருமாத காலம்

விரதமிருக்கச்செய்து "இவ்வார்த்தையே மற்றெவர்க்கும் சொல்லாமல் சேஜும்" என்று திருமந்த்ரார்த்தத்தை உபதேசித்தார். "பரமரஹசியமாக வைத்துக்கொள்ளும் மற்றெவர்க்கும் சொல்லாதீர்" என்று சூளுறவுகொண்டு போகவிடை கொடுத்தார்.

விசேஷ அர்த்தங்களை அறிந்து அறிவிக்க அடியேன் திருக்கோட்டியூரார் போலே சூளுறவு கொண்டேனோ என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

72. உயிராய பெற்றேனோ ஊமையைப் போலே !

ஒருநாள் ஸ்ரீராமாநுஜர் ஒரு ஊமைக்குக் கருணை பாலிக்கக் கருதி தன் அருகில் அழைத்து, தம்முடைய திருவடியைத் தலையில் வைத்து ரக்ஷகமாகக் காட்டியருளினார்.

யாருக்கும் கிட்டாத இவ்வாய்ப்பைக் கூரத்தாழ்வான் கதவின் இடுக்கின் வழியே கண்டு மூர்ச்சித்து. தெளிந்து "ஐயோ! ஒன்றுமறியாது பிறந்தேனாகில் இப்பேறு எனக்கும் கிட்டியிருக்கும். கூரத்தாழ்வானாய்ப் பிறந்து சாஸ்திரங்களைக் கற்றதாலன்றோ தம்முடைய திருமேனிவண்ணம் காட்டாமல் பிரபத்தியை உபதேசித்து விட்டார்" என்றார். அந்தவாய்ப்பு தனக்கிட்டாததால் கூரத்தாழ்வான் தம்மை வெறுத்துக்கொண்டார்.

ஆசாரியனுடைய கருணையினாலே இன்றியமையாததைப் பெறவில்லையே என்று "உயிராய பெற்றேனோ ஊமையைப்போலே" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

73. உடம்பை வெறுத்தேனோ திருநறையூராரைப் போலே !

திருநறையூரார் சிறந்த திருமாலடியார். தினமும் திருக்கோயிலுக்குச் சென்று பெருமாளைச் சேவிப்பது வழக்கம். பெருமானின் திருமேனிவண்ணம் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்னும் இயல்புடையவர்.

ஒருநாள் திருக்கோயிலில் வழிபட்டுக் கொண்டிருக்கும்போது திருக்கோயிலில் தீப்பற்றி எரிய ஆரம்பித்து என்ன முயன்றும் தீயை அணைக்க முடியவில்லை. நாலா பக்கமும் தீ சூழ்ந்து விட்டதால் அனைவரும் கோயிலைவிட்டு வெளியேறிவிட்டனர். திருநறையூராருக்குப் பெருமாளை விட்டுப்போக மனம் வராமல் பெருமாளைத் தீ சூழாமலிருக்க அவரை இறுக அணைத்துக்கொண்டார். தம் உயிரையும் உடலையும் வெறுத்துப் பகவானைக் காப்பாற்ற முற்பட்டார்.

திருநறையூரார் பெருமானைக் கட்டிப்பிடித்துக் கொள்ள அதைக்கண்ட அவர் மனைவியார் ஓடிவந்து அவரைக் கட்டிக்கொள்ள, அதைக்கண்ட அவர் குழந்தைகள் அவர்களைக் கட்டிக்கொள்ள இப்படியாக அவர் குடும்பமே பகவத்கைங்கர்யத்தில் உடலைச் சிறிதும் பேணாது ஈடுபட்டது.

இதுபோல அடியேன் "திருநறையூராரைப்போலே உடம்பை வெறுத்தேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

74. என்னைப் போல் என்றேனோ உபரிசரனைப் போலே !

முன்னொரு காலத்தில் ரிஷிகளுக்கும், தேவர்களுக்கும் யாகத்தில் பயன்படுத்துவது மாவினால் செய்த யாகப் பசுவா அல்லது உயிருடன் கூடிய ஆடா என்பதில் சந்தேகம் வந்தது. ரிஷிகள் மாவினாலான பசுவே போதும் என்றனர். தேவர்கள் உயிருடன் கூடிய ஆடே சாஸ்த்திர சம்மதம் என்றனர்.

இச்சந்தேகம் தீர்க்க உபரிசரன் என்பானை இருசாராரும் கேட்டனர். அவன் தேவர்கள் விருப்பப்படி தீர்ப்பளித்தான். அதனால் ரிஷிகள் சாபமிட்டனர். அவன் பாதாளத்தில் ஆழ்ந்து அசுரர்களால் துன்புறுத்தப்பட்டான். சதா இறைவன் தியானத்திலிருந்ததால் அசுரர்கள் தொல்லை அவனை ஒன்றும் செய்யவில்லை. எனவே அசுரர்கள் அந்தணர் வேடம்பூண்டு அவனிடம் வந்து நாத்திகவாதம் பேசித்திருத்த முயன்றார்கள். உபரிசரனோ அவர்களையும் உத்தம பாகவதர்களாக நினைத்து. அவர்களுக்கும் நல்லறிவு கொடுக்குமாறு இறைவனை வேண்டினான். அவர்களும் நல்லுணர்வு பெற்றனர்.

நாத்திகம்பேசி வருபவர்களையும் நன்மனத்தராய் திருத்தி உய்யக் கொண்டவன் உபரிசரன். இவ்வாறான தன்மனம் தனக்கு இல்லையே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

75. யான் சிறியேன் என்றேனோ திருமலைநம்பியைப் போலே !

ஸ்ரீராமானுஜர் திருவேங்கடமுடையானை வழிபட திருமலை எழுந்தருளினார். திருப்பரிவட்டப் பாறை எனும் இடத்திலே சென்று கொண்டிருக்கும்போது பெரிய திருமலை நம்பிகள் எம்பெருமானுடைய தீர்த்தப் பிரசாதங்களை எடுத்துக்கொண்டு வந்து எதிரே எழுந்தருளி பிரசாதித்தார். ஸ்ரீராமானுஜர் அவருடைய திருவடிகளில் பணிந்து "ஸ்வாமி இவனுக்காகத் தாங்களே இவ்வளவுதூரம் எதிர்கொண்டு வரவேணுமா? யாரேனும் சிறியரை வரவிடலாகாதோ" என்று விண்ணப்பம் செய்தார். திருமலை நம்பிகள் அருள் நகைசெய்து "அப்பனே இத்திருவேங்கடப் பகுதியில் ஆராய்ந்து பார்த்ததில் இவனைவிட சிறியவர்களைக் கண்டிலேன். எனவே இவனே வந்ததாயிற்று" என்றார்.

அடியாருக்கு அடியராகும் தன்மையே ஸ்ரீவைணவம். திருமலைநம்பி அதற்கு வடிவமானார். இதனையே "திருமலை நம்பியைப்போல யான் சிறியேனென்றேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

76. நீரில் குதித்தேனோ கணபுரத்தாளைப் போலே !

ஸ்ரீவைணவ ஆசாரியரான ஸ்ரீநம்பிள்ளையும் ஸ்ரீபாதத்து முதலிகளும் திருவெள்ளறை திருத்தலம் வழிபட்டு, திருவரங்கம் வரும்போது கொள்ளிடத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டது. கொள்ளிடம் கடக்க ஓடம்

கிட்டாத காரணத்தால் தாளிக் கொடிகளினாலாகிய பரிசில் தயார் செய்து வடதிருக் காவேரியைக் கடந்து கொண்டிருந்தனர்.

நடுஆற்றில் பரிசில் சென்று கொண்டிருந்தபோது இருட்டி விட்டது மழை தூறத் துவங்கியது நீரில் அமிழும் நிலை வந்தது பரிசில் விடுபவன் "ஒன்றிரண்டுபேர் நீரில் குதித்தால் மற்றையோர் கரையேறலாம் இல்லாவிடில் எல்லோரும் அமிழ்ந்து போவோம்" என்றான். நடுஆற்றில் பயத்தின் காரணமாக யாரும் குதிக்க விரும்பவில்லை. உத்தமமான மெய்யடியாளான கணபுரத்தாள் என்பவள் பரிசில் விடுபவனைப் பார்த்து "நீ உலகாசாரியராகத் திகழும் நம்பிள்ளையைப் பத்திரமாகக் கரை சேர்த்துவிடு. உனக்குப் புண்ணியம் கிட்டும்" எனக்கூறி இருட்டு வேளையில் ஆற்றிலே குதித்தாள் பின்னர் பரிசில் கரை சேர்ந்தது.

கரையேறிய ஸ்ரீ நம்பிள்ளை "நமக்காக ஒரு ஆத்துமா தட்டுப்பட்டுப் போயிற்றே" எனப் பல்கால் கதறினார். இவ்வார்த்தையைக் கேட்டு இரவு நேரமாகையாலும், கரை தெரியாததாலும் குரல்வரும் திசை நோக்கி அம்மையார் கூறினாள் "சுவாமி கவலை வேண்டாம், அடியேன் ஆற்றில் உள்ள ஒரு கோரைத் திட்டில் ஒதுங்கியுள்ளேன்" என்று. ஸ்ரீநம்பிள்ளை பரிசில்காரனை விட்டு கணபுரத்தாளை கரைக்கு அழைக்க, அம்மையார் ஆசாரியர் திருவடிகளில் விழ்ந்து "அடியேன் ஆற்றிலே ஒழுகிய போது தாங்களே ஒரு கோரை மேடாய் வந்து காத்தருளினீர்கள்" என்று விண்ணப்பம் செய்தார்.

தமக்கு எல்லாவித உறவுமான ஆசாரியனைக் காப்பதற்காகத் தன் உயிரையும் தியாகம் செய்த

கணபுரத்தாளைப் போலே இல்லையே என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

77. நீளுகம் கொண்டேனோ காசிசிங்கனைப் போலே !

காசியில் சிங்கன் என்ற செல்வந்தன் இருந்தான். 'நான், எனது' என்ற அகங்கார மமகாரங்களைக் கொண்டவனாயிருந்தான்.

ஒருதடவை கங்கை கரைக்குச் சென்று அங்கிருப்பவர்களைப் பார்த்து "நான் நீச்சல் வல்லவன், பல தடவை கங்கையைச் சுற்றி வந்துள்ளேன் கடலைக் கூடக் கலக்கும் வல்லமை எனக்குண்டு" என்று சொல்லியவாறே கங்கையில் இறங்கினான் ஐந்தாறு தடவை சுற்றினான். கங்கையில் நீர்ப்பெருக்கு அதிகரிக்கவே ஒரு சுழலில் மாட்டிக்கொண்டான். தன்னால் ஆனவரை முயற்சித்தும் அவனால் கரைசேர இயலவில்லை.

நமது மனதில் மமதையும், அகங்காரமும் கொண்டதால் இச்சுழலில் மாட்டிவிட்டோமே, இனி நமக்குப் பரந்தாமன் தான் கதி எனக் கருதி "எம்பெருமானே இக்கட்டான சூழ்நிலையில் யானைக்கு அருளிய நீயே, அடியேனுக்கும் அருள வேண்டும்" என மனமுருகிப் பிரார்த்தித்தான். கருணைகொண்ட எம்பெருமான் திடீரென காற்றை உண்டாக்கி அலைமேல் அலையாக அடித்து வந்து சிங்கனைக் கரையேற்றினார்.

சிங்கன் கங்கையில் குதித்து தன்னுடைய ஆணவத்தால் ஆபத்து வந்தபோது ஆண்டவனை

நினைந்து ஆலோசித்து வழிபட்டுக் கரை சேர்ந்தான். (ஊகம் – ஆலோசனை) அப்படி "காசி சிங்கனைப் போலே நீரூகம் கொண்டேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப் போலே !

கூரத்தாழ்வான் திருமகனான பட்டர் ஐந்துவயதளவில் வீதியில் புழுதியளைந்து விளையாடிக் கொண்டிருந்தபோது ஸர்வஜ்ஞபட்டன் எனும் மாயாவாதி ஒருவன் வித்யாகர்வம் தோன்ற விருது ஊதி பல்லக்கில் உலா வந்தான்.

பட்டர் இதனைப் பார்த்து "ஆரடா இவன் உடையவர், ஆண்டான், ஜீயர், எம்பார் போன்றோர்களிருக்கும் இடத்தில் விருதூதி வருகின்றான்? இவன் அறிவை முன்னமே நானே ஆராய்ந்து விடுகிறேன் பார்" என்று ஒருகையில் புழுதியை அள்ளிக்கொண்டு அவன் எதிரே போய் நின்றார். அவனைப்பார்த்து "நீ எல்லாம் அறிந்தவனாகில் கையிலுள்ளது எவ்வளவு என்று சொன்னால் உன்னை மதிப்பேன்" என்று சொன்னார். ஸர்வஜ்ஞபட்டன் ஒன்றும் தோன்றாது வாயடைத்து நின்றான். பட்டரோ சிரித்து "இது கைப்பிடி புழுதி என்று சொல்லத் தெரியாத உனக்கோ ஸர்வஜ்ஞன் என்ற விருது" என்று சொன்னார். பட்டரின் மழலைச் சொல்லைக்கேட்ட அவன் "யார் குழந்தை" எனக் கேட்டான். அருகிலுள்ளோர் ஆழ்வான் புத்திரர் என்றனர். "அம்மம்ம! பறப்பதன் குஞ்சோ தவழும் என ஆச்சரியப்பட்டு தனது பல்லக்கிலேற்றி அவர் திருமளிகையில் விட்டுச் சென்றான்.

ஸ்ரீராமநுஜர் திருவாணைப்படி, மைசூரில் வாழ்ந்து வந்த வேதாந்தி மாதவாசாரியார் என்பவரை வாதில்வென்று தனது சிஷ்டராக்கினார். இச்சிஷ்டரே நஞ்ஜீயர் எனப்படும் அருளாளர். நஞ்ஜீயரால் ஸ்ரீவைணவம் பொலிவுற்றது.

ஸ்ரீ வைணவம் தழைக்க அடியேன் "பட்டரைப் போலே வாக்கினால் வென்றேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

79. வாயிற் கைவிட்டேனோ எம்பாரைப் போலே !

ஸ்ரீராமாநுஜராலே ஆட்கொள்ளப் பெற்ற கோவிந்தப் பட்டர் எம்பார், எனப்படுவார். பெரிய திருமலைநம்பியிடம் ஸ்ரீ ராமாநுஜர் ஓராண்டு காலம் ராமாயணம் கேட்டுக்கொண்ட வேளையில் நம்பி திருமாளிகையில் எம்பார் ஆற்றும் கைங்கர்யம் கண்டு மனம் நெகிழ்வார் ஸ்ரீ இராமாநுஜர்.

ஒருநாள் நந்தவனத்திற்கு எழுந்தருளினார் ஸ்ரீராமாநுஜர். எம்பார் தாம் செய்துகொண்டிருந்த கைங்கர்யத்தை விட்டுவிட்டு ஒரு பாம்பின் வாயில் கையைவிட்டு மீளவும் நீராடி வருவதை ஸ்ரீராமாநுஜர் கண்டார். உடனே எம்பாரை நோக்கி "நீர் என்ன செய்து வந்தீர் இப்போது" என்றார் எம்பார்சுவாமி ஒரு நாகப்பாம்பு நாக்கை நீட்டிக்கொண்டு வாயை திறந்தவண்ணம் நோவுபட்டுக் கொண்டிருந்தது. அடியேன் போய் அதன் வாயைப் பார்த்தளவில் அடிநாக்கில் ஒருமுள் தைத்திருக்கக் கண்டு அதனை வாங்கி

விட்டுவந்தேன் என்றார். உயிர்கள் மாட்டுளம்பார் கொண்ட கருணைகண்டு உவந்தார் ஸ்ரீராமாநுஜர்.

இந்த வைபவத்தைக் குறிப்பிடுகிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

80. தோள் காட்டி வந்தேனோ பட்டரைப் போலே !

பட்டரின் பல்லக்கு சுமப்பவர்களில் ஒருவர் மரணப்படுக்கையிலிருந்தார். அவரது ஆத்மாவைக் கொண்டுபோக யமதூதர்கள் வந்தனர். அதேசமயம் பட்டரின் தொண்டராகையால் விஷ்ணு தூதர்களும் அவருடைய ஆத்மாவை அழைத்துப்போக வந்தார்கள்.

யம தூதர்கள் : நீங்கள் ஏன் வந்தீர்கள். இவ்வாத்மாவை நாங்களல்லவோ கொண்டு செல்லவேண்டும்.

விஷ்ணு தூதர்கள் : அப்படியல்ல. இவர் பட்டர் அடியார் ஆகையால் இவரைக் கொண்டு வருமாறு ஸ்ரீமந் நாராயணன் கட்டளை.

யம தூதர்கள் : இவர் திருமாலடியாராயின் உடலில் திருஇலச்சினை இல்லையே

இந்த வார்த்தையைக் கேட்ட அந்தத் தொண்டர் "நாம் இத்தனை காலம் தொண்டுசெய்தும் பஞ்சசம்ஸ்காரம் செய்யப்பெற்றிலமே" எனக்கலங்கி பட்டரை தரிசிக்க வேண்டுமென்று அருகிலிருந்தோர்களிடம் வேண்டினார்.

தொண்டர் விருப்பிற்கிணங்க பட்டர் வந்தார். "சுவாமி இத்தனை காலம் பணி செய்தும் பஞ்ச சம்ஸ்காரம் பெறாத பாவியாய் விட்டேன். யம தூதர்கள் அடியேனை நரகிற்கு அழைக்கிறார்களே" எனத் தொண்டர் கதறினார்.

பட்டர் அவரை அமைதிப் படுத்தி "உமக்குப் பஞ்ச சமஸ்காரம் சாதிக்க இப்போது அவகாசம் இல்லை நீர் நமக்குப் பல்லக்கு சுமந்த அடையாளமாக உமது தோள்களில் திமில்கள் இருப்பதால் நீர் நம்மடியான் என்பதில் சந்தேமில்லை. உமக்குப் பரமபதம் கிடைக்கும்" என ஆசிர்வதித்தார்.

ஒரு உயிர் மரணப்படுக்கையில் கலங்கும் வேளையில் "பட்டரைப்போலே ஆறுதல் கூறினேனோ என்று பட்டரைப்போலே தோள்காட்டி வந்தேனோ" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

81. துறைவேறு செய்தேனோ பகவரைப் போலே !

திருவயிந்திரபுரத்தில் வில்லிபுத்தூர்ப் பகவர் என்பவர் வாழ்ந்து வந்தார். அவர் மற்றைய அன்பர்கள் நீராடும் துறையில் இறங்கி நீராடாமல் தனியாக ஒரு துறையில் இறங்கி நீராடி வருவது வழக்கம். ஒருநாள் அந்தணர்கள் சிலர் இதுகண்டு "சுவாமி நாங்கள் எல்லோரும் நீராடும் துறையில் இறங்காமல் தனியாக தாங்கள் ஒரு துறையைத் தேர்ந்தெடுத்தது ஏன்" என்றனர்.

அதற்கு வில்லிபுத்தூர்ப் பகவர் நீங்களெல்லாம் வர்ணாசிரமம் கைக்கொண்டவர்கள். நான்

பூர்வாசாரியர்களின் அனுஷ்டானத்தைக் கடைப்பிடிக்கும் ஸ்ரீவைணவர்களின் அடியான். ஆதலால் உங்கள் துறைக்கு நான் வரவில்லை. நான் இழியும் துறை வேறாகவே இருக்கட்டும்" என்றார்.

"பண்டே உயிரனைத்தும் பங்கயத்தாள் நாயகற்கே
தொண்டா மெனத்தெளிந்த தூய்மனத்தர்க் குண்டோ
பலகற்றும் தம்முடம்பைப் பார்த்தபி மானிக்கும்
உலகத் தவரோ டுறவு."

என்ற ஞானஸார பாசுரத்திற்குச் சான்றாகத் திகழ்ந்தார்.

"பகவரைப்போலே துறைவேறு செய்தேனா" என்கிறாள் திருக்கோளூர்ப் பெண்பிள்ளை.

81 மஹா வாக்கியங்களால் இவ்வாறு ஸ்ரீ ராமாநுஜரிடத்திலே திருக்கோளூர்ப் பெண்பிள்ளை விண்ணப்பம் செய்து "இம்மாதிரியான ஞானம் வாய்ந்தோருள் ஒருத்தரின் ஞானத்தில் ஒரு அம்சமாவது அடியேனிடம் இருந்தால் அடியேன் திருக்கோளூரில் வசிக்கலாம். ஞானமில்லாத எளியேன் எங்கிருந்து என்?" என்று பரிவோடு விண்ணப்பித்தாள். ஸ்ரீ ராமாநுஜர் மிகவும் உகந்து கேட்டு ஞானப்பெண்பிள்ளையின் திருமாளிகையில் அமுது செய்து அருளினார்.

திருக்கோளூர்ப் பெண்பிள்ளை ரகஸ்யம்

நிறைவு

ஆழ்வார் ஆசாரியார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நின்னருளாம் கதியன்றி மற்றொன்று இல்லேன் ;
நெடுங்காலம் பிழைசெய்த நிலை கழிந்தேன் ;
உன்னருளுக்கு இனிதாகும் நிலைஉ கந்தேன் ;
உன்சரணே சரண்என்னும் துணிவு பூண்டேன் ;
மன்னிருளாய் நின்றநிலை எனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்சிதர வரித்தேன் உன்னை
இன்னருளால் இனிஎனக்குஓர் பரம்ஏற் றாமல்
என்திருமால் அடைக்கலம்கொள் என்னை நீயே !

என்னுயிர் தந்து அளித்தவரைச்
சரணம் புக்கு,
யான்அடைவே அவர்குருக்கள்
நிரைவணங்கி,
பின்னருளால் பெரும்பூதூர்
வந்த வள்ளல்,
பெரிய நம்பி, ஆளவந்தார்
மணக்கால் நம்பி
நன்னெறியை அவர்க்கு உரைத்த
உய்யக் கொண்டார்,
நாதமுனி, சடகோபன்
சேனைநாதன்,
இன்னமுதத் திருமகள் என்று
இவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள்
அடைகின்றேனே.

– வேதாந்த தேசிகர்.